3-1952 M.V.M M BANGALORE 2

# போர்வாள்

வாள் 5 வீச்சு 26

29-3-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

இரா. செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2

# காங்கிரஸ் மேலிடம் — ஒரு மகா சந்நிதானம்

"நான்தான் சுந்தரமூர்த்தி ஓதுவார். சந்நிதானத்தைப் பார்க்கவேண்டும் இப்பொழுது சௌகரியப் படுமா?" என்று விநயத்துடன் கேட்கிறார், திருநீறு பூத்த சைவ மெய்யன்பர்.

"பார்க்க முடியாது. சந்நிதானம் இப்பொழுது கலெக்டருடன் பேசிக்கொண்டிருக்கிறது. நாளைக்கு வந்து பாரும்" என்று பதில் கொடுக்கிறான், மடத்து வாசலில் நிற்கும் டவாலியணிந்த வேலைக்காரன்.

மனமுடைந்த சிவபக்தர் எதையோ நினைத்தபடியே தலையைச் சொறிந்து கொண்டு வந்த வழியே திரும்பிச் செல்கிறார்!

* * *

"ஆத்தூர் தேவர் இரண்டு வண்டி நெல் அனுப்பியிருக்கிறார். மூட்டைகளை எங்கு இறக்கி, யாரிடம் ரசீது வாங்குவது?" என்று கேட்கிறான் வெளியூர் வண்டிக்கார முனியன்.

"சந்நிதானம்தான் ரசீது கொடுக்க வேணும். ஆனால், சந்நிதானம் இப்பொழுது நிஷ்டையிலிருக்கிறது. ஆகையால், நெல்லை கார்வார் சுப்பையர் வீட்டில் இறக்கிவிட்டு, சாயங்காலம் இங்கே வா. நான் ரசீது வாங்கி வைக்கிறேன்" என்கிறான் வேலைக்காரன்.

சுப்பையர் வீட்டில் இறக்கப்பட்ட நெல் மூட்டைகளில் பாதிக்குமேல் சாயங்காலத்திற்குள் மறைந்து விடுகின்றன!

* * *

"மத்தியானச் சமையலுக்கு எண்ணெய் வேண்டும். சந்நிதானத்திடம் போய்ச் சொல்," என்கிறான் பாடசாலை சமையற்கார சிவலோகம் பிள்ளை.

"நான் இப்பொழுது சந்நிதானத்தை நெருங்கவே மாட்டேன். வெளியூரிலிருந்து வந்த ரெண்டு பெண்கள் தேவாரம் பாடுவதைக் கேட்டு ஆனந்தித்துக் கொண்டிருக்கிறது சந்நிதானம்! யாரையும் உள்ளே விடக்கூடாதெனக் கண்டிப்பான கட்டளை!" என்று உண்மையைக் கூறுகிறான், வேக்காரன்.

இந்தக் காண்டி வேலை பார்ப்பதைவிடப் பிச்சையெடுத்து ஜீவனம் செய்வது மேல், என்று முணுமுணுத்துக் கொண்டே செல்கிறான் சிவலோகம் பிள்ளை. அன்று மத்தியானச் சாப்பாட்டில் கறி, குழம்பு, ஒன்றும் கிடையாது பிள்ளைகளுக்கு! வெறும் மோர் போட்டுச் சாப்பிடுகிறார்கள்!

* * *

மேலே குறிப்பிட்ட சம்பவங்கள், தென்னாட்டுச் சைவ மடங்களில் தினசரி நடக்கும் சாதாரண நிகழ்ச்சிகள். எந்தக் காரியமானாலும், சந்நிதானத்தைக் கேட்டுத்தான் செய்ய வேண்டும்—கேட்டுச் செய்ய வேண்டுமென்ற ஐதீகம்.

காலம், இடம், சந்தர்ப்பம். இவற்றைக் கவனியாது சந்நிதானத்தைப் பார்ப்பதும் சுலபமல்ல. ஆகவே, மடத்து நிர்வாகமென்றால், பெருச்சாளிகளுக்குக் கொண்டாட்டம்!

மடம் என்பதற்குப் பதிலாக "சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி" என்றும், சந்நிதானம் என்பதற்குப் பதிலாக 'மேலிடம்" என்றும் மாற்றி அமைத்துக் கொண்டால், தேர்தலுக்குப் பிறகு நம்மிடையே நிலவும் அரசியல் நிலைமையை ஆராய்தல் எளிதாகும்.

"காமராஜர் இன்று டில்லிக்கு விமானம் மூலம் புறப்பட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

# சங்கரரும் சர்மாவும்

## ஒரே நாணயத்தின் இருபக்கங்கள்.

("மங்களப்பிரியன்")

"திராவிடர் இயக்கம் சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இயக்கமாதலால், தென்னாட்டவரின் உள்ளங்களில், ஆழமாக வேரூன்றிவிட்டது. ஆகவே, அந்த இயக்கத்தை அடக்குவதென்பதோ, அழித்துவிட எண்ணுவதோ முடியாத காரியமாகும்".

மேற்கூறியவை பெரியார் இராமசாமி அவர்கள் சுயமரியாதைச் சங்கத்திலே ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கமல்ல; அல்லது அறிஞர் அண்ணாதுரை திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் உதிர்த்த கருத்துக்களுமல்ல. பார்ப்பனச் சேரியில் பிறந்து, தன் இனத்தவரின் கோணல் புத்தியைக் கண்டு மனம் நொந்துபோன திரு. R. S. சர்மா அவர்கள், தஞ்சையில் நிகழ்த்திய தேர்தல் சொற்பொழிவின் ஒரு பகுதிதான் மேலேயிருப்பது. சர்மா சரித்திரம் படிக்காதவர் அல்ல; ஆண்டவனை அவதூறு பேசிடும் அலட்சிய மனப்பான்மைகொண்டவருமல்ல; காளிகோயில் கட்டி, நித்யநைவேத்ய பூசைகள் தவறாது செய்து வருபவர். பாராளுமன்றத்தில் நாற்காலிதேடி, அதன் மூலம் பணம் சம்பாதிக்க வேண்டிய நிலையிலும் அவர் இல்லை, எனினும் அவர் மேலே கண்டபடி பேசியிருக்கிறார்.

'அந்தணர் இப்படிப் பேசலாமா? அது ஆண்டவனுக்குத்தான் அடுக்குமா? வேதபாராயணம் செய்ய வேண்டியவர், வேள்விதர்மம் காப்பவர், தேவாதிதேவர்களின் பூலோக வாரிசு, இப்படிப் பேசலாமா?' என்றுதான் ஆயாசப்படுவர் வேதசிரோன்மணிகள். 'நாத்திகம் நாட்டில் பரவி வருகின்ற நேரத்தில், சர்மாக்கள் இனத்துரோகம் செய்து, வேதநெறிக்கு ஊறு தேடலாமா?' என்றுதான் சஞ்சலப்படுவர் வேதமோதிகள்; 'விபீஷணர்களை, சுக்ரீவன்களை சிருஷ்டித்த பரம்பரைக்கே களங்கம்போல் சர்மா 'பிராமணத்துவேஷி'களுடன் உறவு கொண்டாடலாமா?'— இப்படித்தான் ஆதங்கமடைவர் அந்தணமணிகள். பூசாரிகளுக்கு மட்டுமா இந்த சந்தேகம்? புலியூரும் மந்திரி குமாரசாமி ராஜாவின் மூளையையே குழப்பியிருக்கிறது இந்தப் பிரச்னை! சென்னை இராஜ்யத்தின் முதல் அமைச்சர் தஞ்சையில் பேசும்பொழுது குறிப்பிட்டிருக்கிறார், 'பிராமணியத்தைக் கண்டிக்கும் திராவிட கழகத் தலைவர் ஈ. வெ. இராமசாமி நாய்க்கரோடு, பிராமண சர்மா உறவு கொண்டாடுவது வேடிக்கையானது' என்று. மந்திரியின் மருட்சிக்கு சர்மாவே பதிலளித்திருக்கிறார். 'ஈ. வெ. ரா பார்ப்பனர்களை வெறுக்கவில்லை; பார்ப்பனீயத்தைத்தான் வெறுக்கிறார்,' என்று திராவிட இயக்கத்தின் கொள்கைகளை விதண்டாவாதிகளும் புரிந்துகொள்ளும் வகையில் தெளிவுரை தந்திருக்கிறார்.

சர்மா கிணற்றுத் தவளையல்ல; பல நாடுகளையும் சுற்றி, அங்கு வாழ்கின்ற மக்களின் பண்புகளையும கலாச்சாரத்தையும் அறிந்தவர். ஆகவே, உலகெங்கும் வளர்ந்து வரும் பகுத்தறிவு இயக்கத்தின் சாயல், தென்னாட்டிலும் திராவிட இயக்கமாகப் பரிணமித்திருப்பதைப் புரிந்துகொண்டு, அதன் நேர்மையைத் தயங்காமல் ஒப்புக்கொள்ளுகிறார். சர்மாக்கள் பார்ப்பனீயத்துக்கு அபாய அறிவிப்பு; அதன் அடிவருடிகளுக்குப் புரியாத புதிர்; திராவிட இயக்கத்துக்குக் கிடைத்துள்ள வெற்றிப் பரிசு! ஆனால், சர்மா நாணயத்தின் ஒரு பக்கம்!

நான், மேலே குறித்த செய்தி வெளிவந்துள்ள அதே நாளில் வந்துள்ள இன்னொரு செய்தி, இதோ கீழே:

'தெய்வத் தமிழைக் குடிசையிலும் மாளிகையிலும் சந்தையிலும் நாற்சந்தியிலும் ஒலிப்போமாக...... ...தாளத்தையும் யாழையும் துணைக் கருவிகளாகக் கொண்ட தெய்வ மணம் கமழும் செந்தமிழ், சாதித்திருப்பது கொஞ்சநஞ்சமல்ல...... நாட்டில் இன்று வழங்கிவரும் மொழிகளில் தமிழைத்தவிர ஏனைய மொழிகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலக்கியங்கள் உடையனவாகவோ, பேச்சு வழக்கில் வழங்கிவந்தனவாகவோ தெரியவில்லை......தமிழ்மொழியின் வாடாமலர்களான திருமுறைகளும், திவ்யப் பிரபந்தங்களும் என்றுமே தெய்வக் கொள்கைகளுக்கு உயிரூட்டி வந்துள்ளன."

இதைப்படித்தவுடன் என்ன நினைக்கிறீர்கள்? நாவலர் சோமசுந்தர பாரதியார் தமிழ்ப்பேரவையில் ஆற்றிய சொற்பொழிவு என்றோ, அன்றி, தமிழ்ப்பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார் இலக்கிய மாநாட்டில் பேசிய பேச்சாக இருக்குமோ என்றுதானே நினைக்கிறீர்கள். மனதைத் திடப்படுத்திக் கொண்டு கீழே கொடுத்திருப்பதைப் படியுங்கள். இந்தப் பொன்மொழிகளை உதிர்த்தவர் வேறுயாருமில்லை; வைதீகபுரியின் முடிசூடா மன்னர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள் தான். "என்னப்பா வேடிக்கை பேசுகிறாய்? சமஸ்கிருத சந்நியாசி தமிழுக்குப் போற்றி அகவல் பாடியிருக்கிறதா? புரியாத புதிராக அல்லவா இருக்கிறது?" என்றுதானே கேட்கிறீர்கள? இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை; மறைந்துள்ள சூட்சமந்தான் புரிந்துகொள்ள வேண்டியது!

சங்கரர் சாதாரண மனிதரல்ல; சாத்திரம் தெரிந்தவர்; சரிந்துபோன மத சாம்ராஜ்யங்களைப் பற்றியும், சறுக்கி விழுந்துபோன இனங்களைப் பற்றியும் சரித்திர நூலிலே படித்தவர்; வேதவிற்பன்னர்; உபநிடதங்களை அப்படியே ஒப்பிக்கும் ஆற்றல் படைத்தவர்

மனுநீதியைக் கரைகண்டவர்; மாந்தாதா வகுத்த மார்க்கம் நின்று ஒழுகுபவர்; ஜோசியம் தெரிந்தவர்; நான்கு வேதங்களும் நன்குணர்ந்தவர்; கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் அவருக்குத் தெரியும்; சாணக்கியரின் சந்ததி அவர்—ஆகவேதான், தஞ்சை மாவட்டத்தில் நடக்கும் திருவெம்பாவை--திருப்பாவை மாநாட்டுக்கு அனுப்பியுள்ள ஆசிச் செய்தியில் அவரது 'தமிழ்க்காதலை' மேலே கண்டபடி வெளியிட்டுள்ளார். சமஸ்கிருத சகவாசம் தவிர, வேறு ஒரு வாசகத்துக்கும் உருகாதவர் மணிவாசகத்துக்கு எப்படி உருகினர் என்றுதானே மலைக்கிறீர்கள்? சமஸ்கிருத முணுமுணுப்புத் தவிர எம்பெருமானுக்கு ஏதும் புரியாது என்று கூறுபவர், எப்பொழுதப்பா தேவார திவ்யப் பிரபந்தங்களில் ஈடுபட்டார் என்றுதானே விழிக்கிறீர்கள்! சங்கரருக்கு தமிழ்ப்பதிகங்களின் மேல் ஏற்பட்டுள்ள 'திடீர்க் காதல்' சிந்திக்கின்ற எவருக்கும் எளிதில் புரியும்.

ஆரியம், சனாதனம்—இவற்றை எதிர்த்துப் புரட்சிப்புயல் வீசுவதெல்லாம், அதை அழித்தொழிக்கத் தவறியதில்லை. ஆரியம் புயலை எதிர்த்துநின்று, முறிந்து விழும் மூங்கிலல்ல; வளைந்து வாழும் நாணல் காண்! ஆகவேதான், இந்தி எதிர்ப்புப்போரில் எண்ணற்ற இளைஞர்களையும் கன்னியரையும் எட்டிக் குதித்தோடல்லாமல், தாளமுத்து, நடராசன் மொழிக்காக ஆவியை அர்ப்பணித்ததைக் கண்ட சங்கரர், இறைவழிபாட்டின்போது பள்ளிகளில் வடமொழிப்பாடல்கள் பாடப்படுவதை எதிர்த்து மாணவர்கள் செய்கின்ற கிளர்ச்சியைக்கண்ட சங்கரர், ஒன்று சுயமரியாதைத்திருமணம் அல்லது தமிழ்த்திருமணம் என்ற நிலையில் மணச்சடங்குகளிலிருந்து ஆரிய முறை அடியோடு அகற்றப்பட்டு விட்டதையறிந்த சங்கரர், தமிழ்ப் போர்வையிலாவது ஆரியம் அழியாமல் பவனி வரட்டுமே என்று ஆசைப்படுகிறார். இப்படி நான் கூறும்போது சங்கரருக்கு மனமாற்றம் ஏற்பட்டு விட்டதோ என்று யாரும் தவறாக எண்ணிவிடக்கூடாது. 'தமிழ் ஒலிக்கட்டும்' என்கிறார் சங்கரர். எங்கெங்கே தெரியுமா? குடிசையில், மாளிகையில்—சந்திலும், 'நாற்சந்திலும்—நன்றாகக் கவனியுங்கள் ஆலயங்களில் மட்டுமல்ல!

அப்பரின் பாடல்களும், ஆளுடைப் பிள்ளையின் ஞானத்தமிழும் இந்து மதத்தின் அடிப்படைக் கருவூலங்கள் என்கிறார் சங்கரர்' பக்திச் சுவை கனி சொட்டச் சொட்டக் கவிபாடும் அச்சமயக் குரவர்களைப் பற்றி சங்கரர் கூறியிருப்பதில் நாணயமிருந்தால், தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்களில் இனித் தேவார, திருவாசகப் பாடல்களைத்தவிர, வேற்றுமொழிப்பாடல்கள் வேண்டியதில்லையென்று ஏன் சொல்லியிருக்கக்கூடாது? அவர் அப்படிச் சொல்லமாட்டார்; சொல்லுவார் என்று எதிர்பார்க்கும் அளவுக்கு நாம் சரித்திரம் தெரியாதவர்களல்ல. துரோணரை நாம் அறிவோம். நந்தனை எரித்தவர்களையும் சமணரைக் கழுவேற்றியவர்களையும் அறிவோம்; சங்கரரையும் நன்றாக அறிவோம்!

இந்துமதத்தைத் தமிழ்ச்சாரமாக வடித்தெடுத்தால், அதுதான் திவ்யப்பிரபந்தமும் திருமுறையும் என்று சொல்லுகிறார் சங்கரர். ஆரியசமயமும், தமிழர்சமயமும் எவ்வளவு முரண்பட்டது என்பதை பேராசிரியர் கா. சு. பிள்ளையவர்களும், மறைமலையடிகளாரும் ஐயந்திரிபற விளக்கிவிட்டார்கள். அவர்களின் கருத்துக்கள் ஒருபுறமிருக்க, சங்கரர் அவரது தமிழ்ப் பதிகங்களின் பட்டியலில், அருட்பாவைக் குறிப்பிடாதது, குறிப்பிடத்தக்கது. 'கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போக' வென்றும்; சாதி வெறியரைச் சழக்கர் என்று ஏசி, சாபமிட்ட இராமலிங்கர் சங்கரரின் கவனத்துக்கு வராததில் ஆச்சரியமில்லை. சங்கரர் சனாதன விஷத்தைத் தமிழ்த் தேனிலே குழைத்துக் கொடுக்கிறார். அவர் எவ்வளவு சாமர்த்தியமாகத் தன் வேலையைச் செய்தாலும், அவரது சுயரூபம் அங்கங்கே பேச்சில் வெளிப்படத்தான் செய்கிறது.

'வேதங்களின் சாரமே சைவ வைணவ சமயப் பாடல்கள்'-இது சங்கரரின் மற்றொரு கொலம்பஸ் வேலை! மனுநீதியை முதல் நூலாகக் கொண்ட வழிநூல்தான் திருக்குறள் என்று கூறும் பரிமேலழகர் பரம்பரையானே சங்கரர்! வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி, அதற்கிணையாகத்தான் தமிழ் மொழியை முக்கண்ணர் குடமுனிக்கு வகுத்தருளினர் என்ற கருத்தினைச் சொரணையில்லாமல் கேட்டு ரசித்தவர்கள்தானே நாம்! பின் ஏன் சங்கரர் பேசமாட்டார், வேதத்தின் சாரம்தான் தமிழ்ப் பாடல்கள் என்று.

சர்மா நாணயத்தின் ஒரு பக்கம் என்றால், சங்கரர் மறுபக்கம்! சர்மா-பகல்; சங்கரர்-இருள் சூழ்ந்த இரவு; காலம் மாறினால் கருத்தும் மாறும்-இது சர்மா. காலம் மாறினாலும், பழமைக்கருத்துக்களைப்புகுத்தித் தானும் தன் இனமும் வாழ வேண்டும்—இது சங்கரர். ஆனால் இருவரும் ஒரே இனம்! சர்மா 'சாமான்ய மனிதர்' அவருக்குப் புரிகிறது, பூத்துக் குலுங்கும் புரட்சிப் பூங்காவின் புதுமையும் மேன்மையும். சங்கரரோ உயர்ந்த இடம். வேத விசாரணை தவிர, வேதியர் நலன் தவிர, வேறொன்றும் அறியாதவர். ஆகவே, மக்கள் ஆட்டு மந்தையாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவர். ஆனால், திராவிடர் என்றுமே ஏமாளிகளாக இருந்துவிட மாட்டார்கள். இதை சர்மா அறிந்திருக்கிறார். சங்கரரும் அறியும் காலம் சமீபத்திலேயே இருக்கிறது. சனாதன ஒழிப்பு முதன்மையானதா, தமிழ்வளர்ச்சி முதன்மையானதா என்று கேட்டால், சனாதன ஒழிப்புதான் முதலில் செய்யப்படவேண்டியது என்று கூறும் அளவுக்கு, திராவிடரிடையே அரசியல்விழிப்பு ஏற்பட்டுவிட்டது. சர்மாக்கள் இதை உணர்ந்து விட்டார்கள். சங்கரர்களும் இதைச் சீக்கிரமே உணரவேண்டுமென்பதே நம் கோரிக்கை!

---


"போர்வாள்"

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ. 6 8 0 |
| 6 மாதம் | ரூ. 3 4 0 |

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு,
சென்னை 1.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சஞ்சீவி ரெட்டியும் அவருடன் சென்றார். அவர்கள் டில்லியில் மேலிடத்தாருடன் ஆலோசனை செய்த பிறகு சட்டசபைக்கட்சியின் தலைவர் தேர்தல் சம்பந்தமாக முடிவு செய்வார்கள்.''

''தமிழ் நாடு, ஆந்திரா காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களைக் கலந்து பேசிய பின், காங்கிரஸ் மேலிடம், சென்னை சட்டசபைக் கட்சியின் தலைவராக யாரை நியமிப்பது என்பதுபற்றி முடிவு செய்யும்!''

''கட்சித் தலைவர் தேர்தல் சம்பந்தமாக மேலிடம் என்ன ஆலோசனை கூறியிருக்கிறதென்பதை இன்னும் யாரும் அறிந்து கொள்ள முடியவில்லை!''

இம் மாதிரிச் செய்திகள் தினசரிப் பத்திரிகைகளில் அடிக்கடி வெளிவந்த வண்ணமிருக்கின்றன. காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக்கு மேலிடம் ஆதாரமா, அல்லது, மேலிடத்தின் அதிகாரத்திற்கு சட்டசபைக் கட்சி ஆதாரமா, என்பதற்கு முடிவு காணுதல் எளிதல்ல. ஆனால், மேலிடத்தைக் கேட்டுத்தான் சட்டசபைக் கட்சி எதையும் செய்ய வேண்டுமென்பது ஐதீகம்—சந்நிதானத்தின் அபிப்பிராயம் தெரிந்துதான் நடத்துக் காரியங்கள் நடைபெற வேண்டும் என்பதைப் போல!

இந்த, சந்நிதான—மேலிட ஆட்சியின் விளைவாக, பொது மக்களின் நம்பிக்கை கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. உளுத்துப்போன பழைய மந்திரிசபை ஒழிந்து, புதிய அமைச்சு மலருமென மக்கள் நினைத்தது நிறைவேறுதெனத் தோன்றுகிறது.

ஆட்சியில் குழப்பம், நிர்வாகத்தில் ஊழல், திறமையின்மை, அபிவிருத்தித் திட்டங்கள் மூலையில் தூக்கி எறியப்பட்டு களையாலுக்கு ஆகாரமாகுதல், பதவி வெறியர்களின் வேட்டை — இவற்றைத்தான் இன்று காண்கிறோம்.

பினும் மந்திரிகளின் ஆயுள் நீண்டுகொண்டே போகிறது. காமராஜர்களும், சஞ்சீவி ரெட்டிகளும், ரங்காக்களும், செட்டிநாட்டு ராஜாக்களும் சேர்ந்து, முடிவில்லாத மந்திராலோசனைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். மக்களை வாட்டும் உணவு—உடைப் பிரச்சினைகளைப் பற்றி அவர்களுக்கென்ன கவலை! பஞ்சப் பிரதேசங்களில் முன்ஷி சுற்றுப் பிரயாணம் செய்தார்—இப்பொழுது கவர்னர் ஸ்ரீ பிரகாசா பவனி வருகிறார்—இன்னும் சில நாட்களில் பாரதத்தின் ராஷ்டிரபதியே விஜயம் செய்யப் போகிறாராம்! இந்தச் சுற்றுப் பிரயாணங்களும், பவனிகளும், விஜயங்களும் போதாதா? இன்னும் என்ன வேண்டும்—என்ன செய்ய முடியும்? கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகுதானே ''உறுதி''யான மந்திரிசபை ஏற்படக்கூடும்! அதற்குள் அவசரப் படுவானேன்? இவ்வாறு கேட்கின்றனர், காங்கிரஸ் தலைவர்கள்!

ஆனால், புதிய தலைவர் சமூகமான முறையில் பிரசவிக்கப் படுவாரெனத் தோன்றவில்லை. இழுப்புநோய் மறுபடியும் வந்து விட்டதாம்! ஆச்சாரியாரே மறுபடியும் பிரதம மந்திரியாக வந்துவிடுவாரோ என்ற சந்தேகம் காமராஜருக்கு இன்னும் தீர்ந்தபாடில்லையாம்!

ஆச்சாரியாரின் சிஷ்ய கோடிகள்—பொதுஜனப் ப்ரியர்கள்!—சிலர் காமராஜரிடம் சென்று, ''காங்கிரஸ் தோற்றதற்கு நிர்வாகத் திறமையின்மைதான் காரணம். ஆகவே, நீங்கள் போய் ஆச்சாரியாரை அழைத்துப்பிரதமராகும்படிச் செய்தால், மறுபடியும் காங்கிரஸ் பலமுள்ளதாகி விடும்'' என்று ஆலோசனை கூறினார்களாம். ஆச்சாரியாரின் சீடர்கள் ஆலோசனை கூறுவதென்றால் கட்டளை இடுவதென்று தானே அர்த்தம்! காமராஜரும் ஆச்சாரியாரின் இல்லத்திற்குச் சென்று மந்திரிசபை அமைத்து மக்களைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டாராம்! ஒரு முறையல்ல, இரண்டு மூன்று தடவைகள் அவர் இல்லத்திற்குச் சென்றாராம். ஆனால் ஆச்சாரியாரிடமிருந்து நேரடியான பதில் கிடைக்கவில்லை. ''கவர்னர்-ஜெனரலாக வேலை பார்த்த நான் மறுபடியும் ஒரு சாதாரண ராஜ்யப்பிரதமராக வருதல் முறையா? அரசியல்சம்பிரதாயங்களுக்கு ஒத்ததாகுமா? புதிதாகத்தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்களா? அவர்களை ஏற்றுக்கொள்

## திராவிட முன்னேற்றக் கழக

### பொதுக்குழுக் கூட்டம்

அன்புடையீர்,

வணக்கம் மாநில மாநாடு முடிந்து. தி. மு. க. வின் முதல் பொதுக்குழுக் கூட்டம் 6-4-52 ஞாயிறு காலை 10-மணிக்கு ஈரோடு எஸ். ஆர். சந்தானம் மண்டியில் நடைபெறும். அவ்வமயம் கழக சம்பந்தமான வேலைகள் குறித்தும், கழக சட்டதிட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கான முறைகள் பற்றியும், மாநில மாநாட்டுக் கணக்குவகை பற்றியும், கழக தினத்தாள் குறித்தும் கலந்து பேசப்படும். பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்

அண்ணாதுரை.

ளும்படி கூறுவதும் நியாயமா குமா?" என்று இவ்வாறு கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாராம் ஆச்சாரியார். ஆனால் "முடியாது" என்று தீர்மானமாகக் கூறவேயில்லையாம்!

இந்தச் செய்தி கேட்டதும், ஆச்சாரியாரின் பக்தர்கள் மனதில் புதிய நம்பிக்கை நட்சத்திரம் உதயமாயிற்று. மறுபடியும் ஆச்சாரியார் சென்னையில் ராஜ்ய பரிபாலனம் செய்வார், என்று எண்ணியவுடனேயே அவர்கள் புளகாங்கித மடைந்தனர். தங்களையும் மறந்து ஆனந்த நடனம் செய்தனர். ஆச்சாரியார் பிரதமராக வருவதில் காங்கிரஸ் மேலிடத்திற்குப் பூரண திருப்தியெனவும், அவர் ராஜப் பிரதமராக வரக்கூடுமெனவும், வரத்தான் வேண்டுமெனவும், காங்கிரஸ் பத்திரிகைகள் எழுத ஆரம்பித்தன.

'சனியன் ஒழிந்தது' என்றிருந்த காமராஜர் மறுபடியும் கவலைப்பட ஆரம்பித்தார். பாம்பின் கால் பாம்பறியும் என்பதற்கேற்ப, ஆச்சாரியாரைக் கொண்டு வருவதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சிகளை உடைப்பதில் ஈடுபட்டார். கல்கத்தாவிற்குச் சென்று காங்கிரஸ் மேலிடத்தைச் சரிக்கட்டினார். ஆச்சாரியார் மறுபடியும் நுழையாமலிருப்பதற்கான வழிகளைச் செய்துவிட்டுச் சென்னை திரும்பினார்.

திரும்பிவந்த காமராஜரை, வழக்கம்போல், பத்திரிகை நிருபர்கள் பேட்டிகண்டு, "கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாக என்ன முடிவு செய்யப்பட்டது?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் அளித்த பதில்: "இது கட்சியினால் தீர்க்கப்பட வேண்டிய விஷயம். இந்தப் பிரச்சினையை முடிவு செய்யும் உரிமை கூறப்பினர்களைத் தவிர மற்றவர்களுக்குக் கிடையாது!"

தலைவர் தேர்தலில் காங்கிரஸ் மேலிடம் குறுக்கிட முடியாது என்பதையே மேற்கண்டவாறு மறைமுகமாகக் குறிப்பிடுகிறார் காமராஜர். உண்மையாகவா? மேலிடம் குறுக்கிட முடியாதா? அல்லது, மேலிடத்தின் கட்டளைப்படி அவர் நடக்கத் தயாராயிருப்பதால், குறுக்கிடவேண்டிய அவசியம் கிடையாதா?

உண்மை எவ்வாறிருப்பினும், புதிய மந்திரிசபை அமைக்கும் பிரச்சினை, மடத்து நிர்வாகம் போல் வஞ்சகமும், ஊழலும், சிக்கலும் மலிந்ததாயிருப்பது வேதனைதரும் விஷயமாகும்.

அரசியல் சட்டத்தில் "மேலிடம்" (High Command) என்ற ஒரு அங்கம் இருப்பதாகக் காணோம். ஆயினும், இந்த மேலிடத்தின் விருப்பத்தை அறிந்துகொள்ளக் காத்துக்கொண்டிருக்கிறார், கவர்னர் ஸ்ரீ பிரகாசா! அரசியல் சட்டத்தின்படி நடக்கக் கடமைப்பட்டவரெனக் கூறப்படும் கவர்னர் வடக்கு நோக்கித் தவமிருப்பானேன்? அரசியல் சட்டமாம் சட்டம்! இது மக்களாலேயே உடைத்தெறியப்படும் காலம் வெகு தூரத்திலில்லை!

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தை லலிதாவிற்கு விளக்கிச் சொன்னான். லலிதா ஒன்றும் பேசவில்லை மவுனமாக உட்கார்ந்திருந்தாள்.

அடுத்த நாள் காலையில் ஊர் மக்களிடையே ஒரே பரபரப்பு! எல்லோரும் கோவிலை நோக்கி விரைந்து சென்றார்கள்.

பாழ் மண்டபத்திற்கு எதிரே நின்ற வில்வ மரத்துக் கிளையில் லலிதாவின் உடல் தொங்கிக் கொண்டிருந்தது......கனவு முடிந்தது.


எமது மகத்தான புதிய வெளியீடு!

கிரேக்க நாட்டின் பேரறிஞர் சாக்ரடீஸ் நீதி மன்றத்தில் புரிந்த சங்கநாதம் புத்தக வடிவில் வெளி வந்திருக்கிறது.

"கௌதமன்" தீட்டிய

**ஏதென்ஸின் தீர்ப்பு**

ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய அறிவு பொக்கிஷம்

விலை அணா 0 8 0

வியாபாரிகட்குக் கழிவு 25%.

**மின்னொளிப் பதிப்பகம்**

31, பீட் :: சென்னை-1

# வஞ்சக வலை—நச்சு மீன்கள்!

சினிமாக் கொட்டகை வாசலில் இரண்டு நண்பர்கள் சந்திக்கின்றனர்.

முதல் நண்பர்: "என்ன சார்! வேறு வீட்டிற்குக் குடிபோகிறதாகக் கூறினீர்களே! வீடு கிடைத்து விட்டதா?"

இரண்டாவது நண்பர்: "இன்னும் இல்லை. கிடைத்தாலும் இந்த ஊரில் குடியிருப்பதாக உத்தேசமில்லை! ஏதாவது காட்டிற்கு நடுவே வீடு கிடைத்தால் நல்லதென்று நினைக்கிறேன்!"

முதல்: "என்ன திடீரென இம்மாதிரி முடிவிற்கு வந்து விட்டீர்கள்! உலகைத் துறந்த ரிஷிபுங்கவராகி விடவேண்டுமென்ற உத்தேசமோ?"

இரண்: "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நான் ஒரு கொள்ளைக் கூட்டத்தைத் தயார் செய்து வருகிறேன். கொள்ளையடித்த பின் போலீசார் கையில் சிக்காமல் ஒளிந்துகொள்ள வேண்டியிருந்தால், அதற்குத் தகுதியான இடமாக இருக்கவேண்டாமா?

முதல்: "என்ன சார், திடீரென நீங்கள் கூடக் கிண்டல் பேச்சில் ஆரம்பித்து விட்டீர்கள்! ஏதாவது சினிமாவிற்குக் கதை எழுதி வருகிறீர்களா, என்ன?"

இரண்: "என்னைப் பார்த்தால் கொள்ளை அடிக்கத் திறமையுள்ளவன் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? சரி, கொஞ்சம் பொறுத்திருங்கள், இன்னும் சில தினங்களில் நீங்கள் பேப்பர்களில் படிக்கும்பொழுது தானாகத் தெரிந்து கொள்ளுவீர்கள்! நாளை மறுதினம் இரவில், பல்லாவரத்திலுள்ள ஒரு பெரிய பங்களாவிற்குள் புகுந்து கொள்ளை அடிப்பதாகத் திட்டமிட்டிருக்கிறேன்!"

முதல் நண்பர், இரண்டாவது நண்பரை, மேலும் கீழும் ஒரு தடவை உற்றுப் பார்க்கிறார். அவருக்கு விஷயம் விளங்கி விடுகிறது. முகத்தில் சோகக்குறி தென்படுகிறது. இருப்பினும் சோகத்தை வெளியில் காட்டாமல் மறைத்துக்கொண்டு, நண்பரைப் பார்த்து, "சரி, என்னையும் உங்கள் கொள்ளைக் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள். வாருங்கள், போகலாம்" என்று கூறி, அவரை அழைத்துக் கொண்டு செல்கிறார்—நேரே கீழ்ப்பாக்கத்திற்கு! பைத்தியக்கார மருத்துவ நிலையத்தில் கதவுகள் திறக்கின்றன. உள்ளேயுள்ள தோழர்களோடு மற்றுமொருவர் சேர்கிறார்!

உண்மையான கொள்ளைக்காரன் எவனும் தனது தொழிலை விளம்பரப் படுத்திக் கொண்டு செய்வதில்லை. அப்படி எவனாகிலும் செய்ய முன் வருவானாகில், அவன் கீழ்ப்பாக்க மருத்துவ நிலையத் தோழர்களுள் ஒருவனாகத் தான் இருக்கவேண்டும்.

**எந்தச் சர்வாதிகாரியும், தன் உண்மை உருவத்தை, தான் சர்வாதிகாரியாக வருமுன் காட்டியதில்லை. எந்தச் சர்வாதிகார அரசாங்கமும், எதேச்சாதிகார முறையில் நாடாள்வது தான் தனது நோக்கமென, மக்களிடம் முன்னறிவிப்புத் தந்ததில்லை.**

**ஜனநாயக முறையிலிருந்து பிறந்த அரசாங்கங்கள்தான் பின்னர் எதேச்சாதிகாரங்களாகத் தோற்றமளிக்கின்றன. மக்களுக்கு நற்பணி புரிவதாக ஆசை வார்த்தை கூறி, அவர்களின் ஆதரவுபெற்று நாடாள வந்தவர்கள் தான், பின்னர் மக்களின் மனதையும் உடலையும் வதைக்கும் காதகர்களாகின்றனர். ஜனநாயக வார்த்தைகளை உபயோகப் படுத்திக் கொண்டே, ஜனநாயகத்திற்குக் குழிதோண்டிப் புதைக்கின்றனர்.**

"மக்கள்தான் உங்களை வேண்டாமென்று வெறுக்கின்றார்களே! ஏன் இன்னும் பதவியை விட்டு விலகவில்லை?"

"மக்கள் எங்களை உண்மையிலேயே வெறுக்கவில்லை; அறியாமையால், நாங்கள் எவ்வளவு நல்லவர்களென்பதை அவர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை! எங்களைத்தவிர மற்ற எவர் கையில் அதிகாரம் சிக்கினாலும் அதனால் நாட்டிற்குத் தீமை விளையும் என்பதை இன்னும் மக்கள் அறிந்தார்களில்லை. ஆகவே, மக்களின் நன்மைக்குறியே நாங்கள் இன்னும் பதவி வகிக்கிறோமேதவிர, எங்களுடைய சுயநலம் கருதியல்ல!"

இது வரலாறு காட்டும் வழக்கமான பதில்தான், புதியதல்ல. இப்பதிலை ஏற்றுக்கொண்டால் எதேச்சாதிகாரம், ஏற்க மறுத்து அரசாங்கத்தை மாற்றி அமைத்தால் ஜனநாயகம்.

மலைக்கும் மடுவிற்கும் வெகு தூரம் இருப்பது உண்மைதான். ஆனால் உச்சியிலிருந்து ஒரு அடி தவறாக எடுத்து வைத்தால், மடுவில் விழுந்து உடல் சுக்குநூறாக ஒரு சில வினாடிகளே போதுமானது. ஜனநாயகப் பண்பாட்டிற்கும், எதேச்சாதிகாரப் போக்கிற்கும் உள்ள மாறுபாடுகள் எண்ணற்றவை. ஒன்றுக்கொன்று வெகு தொலைவில் உள்ளன. ஆனால், ஒன்று மற்றொன்றாக மாறுவது வெகு எளிது. மக்களது விழிப்புணர்ச்சியில் சிறிது சோர்வு ஏற்பட்டாலும், ஜனநாயகம் வெகு விரைவில் பாதாளத்தில் தள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

அரசாங்கம் அடிக்கடி மாறி வருவதுதான் ஜனநாயகத்தின் தனிச் சிறப்பு. நல்லவன் என்பதற்காக நாடாளும் உரிமையை ஏகபோகமாகப் பெறமுடியாது, உண்மையான ஜனநாயக அமைப்பில். இன்று நாடாள்பவன் நாளை திடீரென்று வீட்டிற்குச் செல்ல வேண்டிவரும். வீட்டில் உட்கார்ந்திருப்பவன் ஆட்சி பீடத்தை நோக்கி இழுக்கப் படுவான். **இவ்வாறு அவசியம் ஏற்படும்பொழுது அரசாங்கம் மாறும் முறை என்று கைவிடப் படுகிறதோ, அன்றே நாட்டில் எதேச்சாதிகாரம் ஆரம்பமாகிறது.**

இந்த உண்மையைத்தான், சில தினங்களுக்குமுன் சென்னை மேல்சபையில் நடந்த விவாதத்தின் பொழுது, பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் லட்சுமணசாமி மிக நுண்ணிய முறையில் எடுத்துக் காட்டினார்—காங்கிரஸ் எதேச்சாதிகாரிகளின் பார்வைக்கு!

**"ஜனவரி மாதக் கடைசியிலேயே தேர்தல் முடிவுகள் தெரிந்து விட்டன. அப்படியிருந்தும், இன்னும் ஏன்**

ஒழுங்கான முறையில் மந்திரி சபை மாற்றி அமைக்கப்படவில்லை? ஒரு அரசியல் கட்சியின் கையிலிருந்து மற்றொரு கட்சிக்கு அரசாங்க அதிகாரத்தை மாற்றுவது ஜனநாயகத்தின் அடிப்படையான கொள்கைகளில் ஒன்றாகும். தேர்தல் மூலம் இந்த மாறுதல் ஏற்பட வேண்டுமென்பது எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்ததேயாகும். அப்படியிருந்தும், பொறுப்புள்ளவர்களிடம்கூட தெளிவற்ற தன்மை ஏன் காணப்பட வேண்டும்?"

இது சர் லட்சுமணசாமி பேச்சின் ஒரு பகுதி. அவரது கேள்விகளுக்கு இன்னும் காங்கிரஸ் ஆட்சியாளரிடமிருந்து பதிலில்லை! "பொறுப்புள்ளவர்கள்" என்று அவர் குறிப்பிடுவது காங்கிரஸ் மேலிடத்தாரை. பல்கலைக் கழகத் துணைவேந்தராதலால், பொறுப்பை மறந்து எதேச்சாதிகார வெறி பிடித்து அலைபவர்களைக்கூட 'பொறுப்புள்ளவர்கள்' என அழைத்து, அவர்களின் விரும்பத்தகாத, நாட்டிற்குத் தீமை பயக்கத்தக்க போக்கை, மிக நுண்ணிய முறையிற் கண்டிக்கிறார். தேர்தல் மூலம் மக்கள் தந்த தீர்ப்பை ஏன் மாற்ற முயற்சிக்கிறீர்கள்? என்று கண்ணியமான முறையில்—ஆனால் மிகத் தெளிவாக—கேட்கிறார். ஜனநாயகத்திற்குக் குழி தோண்டப்படுகிறது என்பதை குருடரும் கண்டுகொள்ளும் வகையில் எடுத்துக் காட்டுகிறார்.

மேல்சபைத் தேர்தல் முடிவுகள் இன்னும் தெரியாததால், இடைக்கால மந்திரிசபை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதென்று காங்கிரஸ் பிரமுகர்கள் கூறுகின்றனர். இது, முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயலும் தந்திரத்தைவிட அபத்தமானது. புதிய மந்திரிசபை அமைப்பது மேல்சபை உறுப்பினர் கையிலில்லை. தவிரவும், இப்பொழுதுள்ள அரசியல் சட்டத்தின்படி பார்த்தாலும், சட்டசபை உறுப்பினர்கள்தான் மந்திரிகளாக வரலாம் என்ற நிபந்தனையும் கிடையாது. இன்று இடைக்கால மந்திரிசபையின் பிரதமராயிருக்கும் தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜா எந்தச் சட்டசபையில் உறுப்பினராயிருக்கிறார்? கீழ் சபைக்கு நின்று தோற்றார். மேல்சபைத் தேர்தலை எட்டிப் பார்க்கவேயில்லை!

அவரைப்போல் பிரதமராயிருக்கும்படி கவர்னர் பெருமான் அழைப்பானேன்? அப் பதவிக்குப் புதிய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருள் ஒருவரை அவர் ஏன் அழைக்கவில்லை? தோற்ற காங்கிரஸ் பிரதமரை மீண்டும் பதவியில் அமர்த்துவதுதான் ஜனநாயக முறையா? மக்கள் தீர்ப்பை மதித்து நடத்தும் முறை இதுதானா? இந்த முறையை, கவர்னரின் கட்சிபேதமற்ற தன்மைக்கு உதாரணம் என்று கூறுவது அறிவிற்கு உகந்ததா?

டில்லியின் மனதிற்குப் பிடிக்காத கட்சி சென்னையில் ஆட்சிபீடம் ஏறுவது அரிது. காங்கிரசல்லாத கட்சிகள் தேர்தலில் வெற்றி பெற்றாலும், அதிகாரம் அவைகளுக்குக் கிடைக்காமலிருக்கச் செய்யும் முயற்சிகளுக்கு கவர்னரும் உடந்தையாயிருப்பார். இம்மாதிரியான எல்லாவித எதேச்சாதிகாரச் செய்கைகளுக்கும் இன்றைய அரசியல் சட்டம் இடம் தருகிறது. இதுதான் இப்பொழுது காணப்படும் உண்மையான நிலை.

மற்றக் கட்சிகளின் உதவியின்றித் தானே மந்திரிசபை அமைப்பதற்கு வேண்டிய ஸ்தானங்கள் சென்ற தேர்தலில் காங்கிரசிற்குக் கிடைக்கவில்லை. ஆகவே, சுயேச்சையாகவோ, மற்றக் கட்சிகளின் சார்பிலோ நின்று வெற்றி பெற்ற உறுப்பினருள் சுயநல மனப்பான்மை கொண்ட ஒரு சிலரை வலையில் இழுத்து, சட்டசபை காங்கிரஸ் உறுப்பினரின் எண்ணிக்கையை அதிகப் படுத்துவதற்கு அவகாசம் வேண்டும். நாட்டுத் துரோகிகள் எந்த நாட்டிலும் ஒரு சிலராவது இருக்கத்தான் செய்வார்கள். காங்கிரஸ்தான் மறுபடியும் நிச்சயமாக ஆட்சிபீடத்தில் அமரும் எனத்தெரிந்துவிட்டால், அதில் சேருவதற்குத் தயங்காத உறுப்பினர்களும் இருக்கிறார்கள் என்பது தெளிவு. மக்கள் தேர்தலில் தந்த தீர்ப்பை மாற்றுவதற்கு வேண்டியதெல்லாம் கொஞ்சம் அவகாசம்—வஞ்சக வலை வீசி மச்சமீன்களைப் பிடிப்பதற்குச் சிறிது நேரம் தேவை. இந்த இடைக்காலத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்பட்டதுதான் இப்பொழுதுள்ள மந்திரிசபை.

மக்களின் மனதிற்கு மாறாக, எதேச்சாதிகாரத்தை நோக்கிச் செல்லும் காங்கிரசின் இந்தப் போக்கைக் கண்டிக்கிறார் சர் லட்சுமணசாமி. ஆனால் ஜனநாயகமே தன் உயிர்நாடியென இன்னமும் காங்கிரஸ் கூறிவருகிறது. உண்மையாகவே கொள்ளையடிக்கும் நோக்கம் கொண்டவன், தன் எண்ணத்தை வெளிப்படையாகக் கூறுவதில்லை. கொள்ளைக்காரனுக்கு இடம் கொடாமலிருப்பது பொதுமக்களின் கடமை.

---

15-ம் பக்கத் தொடர்ச்சி)

விமான நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட மிஸ்திரி, அங்கு தயாராக நின்றுகொண்டிருந்த உத்தரப் பிரதேச சி. ஐ. டி. அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் உடனே மிஸ்திரியை விமானத்திலேற்றி, லட்சுமணபுரிக்கு அழைத்துச்சென்று, அங்கு ஒரு வாரம் காவலில் வைத்தார்.

மிஸ்திரியைக் கைது செய்து, அவரை உடனே மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்யாமல், லட்சுமணபுரிக்கு விமானத்திலேற்றிச் சென்று காவலில் வைத்தது சட்ட விரோதமான செயலென்று, கராஞ்சியா சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். நீதிபதிகள் அவரது மனுவை அனுமதித்து, மிஸ்திரியைக் கடத்திச் சென்ற முறை சட்ட விரோதமானதெனவும், அவர் உடனே விடுவிக்கப்பட வேண்டுமெனவும் தீர்ப்பளித்தனர். மிஸ்திரியும் விடுதலை செய்யப்பட்டார்!

இந்திய துணைக் கண்டத்தில், எல்லா மக்களுக்கும் பிரஜா உரிமைகள் அளிக்கப்பட்டிருப்பதாகக் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் வானளாவப் பேசுகின்றனர். இது உண்மையானால், ஒரு பத்திரிகாசிரியரை, சட்டவிரோதமானமுறையில் கைது செய்து, காவலில் வைத்து, அல்லலுக்காளாக்கிய அக்கிரமத்தை விசாரித்து, இதற்கு உடந்தையாக இருந்த காங்கிரஸ் பிரமுகர்கள்—மந்திரிகள் உள்பட—எல்லோர் மீதும் தகுந்த முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு, டில்லி அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

# போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 29—3—52 சனிக்கிழமை


# முதல் அபாய அறிவிப்பு

காங்கிரஸ் மந்திரிசபை நாடகம், திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத்தில், சில தினங்களுக்கு முன் ஆரம்பமாயிற்று. ஆனால், ஆரம்பித்தபொழுதே "கெட்ட சகுனங்கள்" தோன்றின.

புதிய சட்டசபையை ராஜப் பிரமுகர் ஆரம்பித்து நடத்திய சொற்பொழிவைக் கண்டித்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர். பணம் அதிகம் வேண்டுமென்று மந்திரிசபை கொண்டுவந்த தீர்மானம், ஓட்டுக்கு விடப்பட்டு, தோற்கடிக்கப் பட்டது!

ஆனால், மந்திரிகள் இன்னும் ராஜினாமா செய்யவில்லை. சுயேச்சை அங்கத்தினர்களில் இன்னுஞ் சிலரைத் தங்களுடன் சேர்த்துக்கொண்டு நிரந்தரமாக ஆட்சி புரியலாமென்று எண்ணுகின்றனர். நடுவில், மறுபடியும் மறுபடியும் கெட்ட சகுனங்கள் தோன்றிக்கொண்டே வருகின்றன!

ராஜப் பிரமுகர் சொற்பொழிவு நிகழ்த்தும்போது, சட்டசபையிலிருந்து வெளியேறலாமா! இதென்ன ராஜத் துரோகம்! என்று காங்கிரஸ் மந்திரிகள் பதைக்கின்றனர். பரம்பரை பரம்பரையாய், வாழையடி வாழையாய் நாடாண்டு வரும் ராஜ குடும்பத்தினரை அவமரியாதை செய்வது அடுக்குமா? என்று அங்கலாய்க்கின்றனர்.

அவர்களுக்கு மந்திரிகளாகப் பதவி வகிக்க வேண்டுமென்ற ஆசையே கிடையாதாம்! ஆனால் "ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக," கசப்பு மாத்திரை சாப்பிடுவதுபோல், வெறுப்புடன் மந்திரிசபை அமைத்துள்ளார்களாம்! ஆகவே, தங்களுடைய கொள்கைகளை விளக்க வந்த ராஜப்பிரமுகரை அவமானப்படுத்தியது, ஜனநாயக முறைக்கு விரோதமானதென்று அறிவுரை தருகிறார்கள்!

அவமானம் ராஜப்பிரமுகருக்கல்ல—அவமானப் படுத்தப் படத்தக்க ஒரு கருவியாகக்கூட எதிர்க் கட்சியினர் அவரை மதிக்கவில்லை. கண்டனத்தின் நோக்கம், காங்கிரஸ் மந்திரி சபையின் அதிகாரத்தை மறுப்பதாகும்—டில்லிக்குத் திராவிடம் சட்டசபை மூலமாகத் தந்த முதல் அபாய அறிவிப்பு.

திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய சட்டசபையின் மொத்த எண்ணிக்கை 109. இதில் காங்கிரஸ் கட்சி 46; இடதுசாரி ஐக்கிய முன்னணி 32; சுயேச்சை உறுப்பினர் 11; திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் 8; கொச்சின் பார்ட்டி 1. மொத்த எண்ணிக்கையில் பெரும்பான்மை பெறாத காங்கிரஸ் இப்பொழுது மந்திரி சபை அமைத்துள்ளது.

மற்ற எந்தக் கட்சிக்கும் தனியான பெரும்பான்மை பலம் கிடையாதே! கட்சிகளின் தனி எண்ணிக்கைகளில், அதிக எண்ணிக்கை பெற்றுள்ள நாங்கள் மந்திரிசபை அமைப்பதில் என்ன தவறு? எனக் காங்கிரஸ் கட்சியினர் கேட்கின்றனர்.

தவறு மாத்திரமல்ல, ஜனநாயகத்திற்குத் துரோகம் செய்வது, என்று நாம் கூறுகிறோம்.

மற்றக் கட்சிகளைப்போல காங்கிரசும் ஏற்கனவே அதிகாரம் வகிக்காமலிருந்து, முதன்முதலாக இப்பொழுதுதான் அது சட்டசபைக்குவந்திருக்குமானால், தனியான பெரும்பான்மை எண்ணிக்கை இல்லாவிட்டாலுங்கூட, இருக்கிற கட்சிகளுள் அதிகஎண்ணிக்கை பெற்றதுஎன்பதற்காக அதை மந்திரி சபை அமைக்க அனுமதிப்பது ஒருசமயம் பொருத்தமாயிருக்கலாம். ஆனால் இப்பொழுதுள்ள நிலைமை வேறு. ஏற்கனவே சில ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சி நடத்திற்று. அதன்பின் தேர்தல் நடந்தது. தேர்தலில் அது தோற்றது — அதாவது, முன்னைபோல் தனியான பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி நடத்துவதற்கு வேண்டிய எண்ணிக்கையை அது பெறமுடியவில்லை.

காரணம் என்னவென்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது—

(10-ம் பக்கம் பார்க்க)

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டி: "என்னமோப்பா, அவரவர்கள் விதிப்படி நடக்கும். அவன் யார் யாருக்குஎதெதென்று எழுதியிருக்கிறனோ, அப்படித் தானே எல்லாம் நடக்கும்!"

இவர்களது சம்பாஷணையில் ஒரு வார்த்தைகூட விடாமல், பக்கத்து அறையில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள், லலிதா. அவளது உள்ளத்தின் இன்ப ஊற்று பீறிட்டுக் கிளம்பியது. மார்பு விம்மிற்று. நரம்புகளுக்குள் ஏதோ ஒன்று புகுந்து மின்சாரம் போல் ஓடிற்று. ராஜேந்திரன் சிறிது நேரத்திற்கெல்லாம்சென்றுவிட்டான்,

பிறகு, தினந்தோறும், ராஜேந்திரன் தவறாது பாட்டி வீட்டிற்கு வருவான். முதலில் காலை நேரங்களில் மட்டும் வந்துகொண்டிருந்தான். பிறகு, மாலை நேரங்களிலும் வர ஆரம்பித்தான். லலிதாவும், கொஞ்சம் கொஞ்சமாகக் கூச்சத்தை மறந்து அவனுடன் சரளமாகப் பேச ஆரம்பித்தாள்.

பத்துப் பதினைந்து நாட்கள் கழிந்த பின்னர், திருச்சியிலிருந்து பாட்டிக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், அவள் பேத்தி லலிதாவைத் தன் மகன் ராஜேந்திரனுக்குத் தரவேணுமெனவும், அது விஷயமாகப் பேசுவதற்காகத் தானே இன்னும் இரண்டு மாதங்களுக்குள் நேரில் வருவதாகவும் ராமலிங்கம்பிள்ளை எழுதியிருந்தார்.

பாட்டியின் சந்தோஷத்திற்கு அளவில்லை. அதைவிட சந்தோஷம் லலிதாவிற்கு. ராஜேந்திரன் மாத்திரம் தன் மகிழ்ச்சியை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

லலிதா ஒருநாள் கோவிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தாள். இரவு ஏழு மணியிருக்கும். பின்னால் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள் — வேறு யாருமில்லை, ராஜேந்திரன்தான்; "நீங்களா! வேறு யாரோ என்று பயந்துவிட்டேன்!" என்றாள் லலிதா.

ராஜேந்திரன் வெறி கொண்டவன்போல காணப்பட்டான். "லலிதா! என்னை மணம் செய்துகொள்ள உனக்கு விருப்பந்தானே?" என்றான்.

"ஏன் உங்களுக்கு அந்தச் சந்தேகம்?" என்றாள் லலிதா.

"அப்படியானால் என்னுடன் மறுபடியும் கோவிலுக்கு வா" என்றான் ராஜேந்திரன்.

லலிதா: "எதற்காக?"

ராஜேன்: "வாயேன், வந்தபின் தெரியும்!"

லலிதா: "இல்லையில்லை, நான் வரமாட்டேன்."

ராஜேன்: "வரலாம், வா. நாம் தான் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் மணம் செய்துகொள்ளப் போகிறோமே! ஆகையால் குற்றமில்லை!"

லலிதா: "எனக்கு என்னமோ பயமாய் இருக்கிறது."

"நான் கூப்பிடுகையில் உனக்கென்ன பயம்!" என்று கூறிக்கொண்டே அவள் கையைப் பிடித்து இழுத்தான். லலிதாவும், அரை மனதுடன், அவனுடன் சென்றாள்.

அது ஒரு பழைய கோவில். "சுவாமி"க்கு எதிரில் இரண்டு மூன்று அகல் விளக்குகள் மங்கலாக எரிந்து கொண்டிருந்தன. மற்ற இடங்களிலெல்லாம் ஒரே இருட்டு. ஜனநாட்டமே இல்லாமல் நிசப்தமாயிருந்தது.

ராஜேந்திரன் அவளை ஒரு இருட்டு மண்டபத்திற்கு அழைத்துச் சென்றான். லலிதாவிற்கு முதலில் பயமாயிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் பயம் தெளிந்துவிட்டது. இன்னும் சில நிமிடங்கள் சென்றன...... அந்த மாதிரி இருக்குமென அவள் தனது கனவுகளில் ஒருநாளும் நினைத்துப் பார்த்ததேயில்லை!

பிறகு இருவரும் மண்டபத்தை விட்டு வெளியே வந்தனர். ராஜேந்திரன் சிறிதுதூரம் அவளுடன்கூட வந்தபிறகு, நேரே தனது இடத்திற்குச் சென்றுவிட்டான். லலிதா தன் வீட்டிற்குத் திரும்பினாள்.

"ஏன் இவ்வளவு நாழி?" என்று பாட்டி கேட்டதற்கு, "சுவாமிக்கு யாரோ அபிஷேகம் செய்தார்கள்! விசேஷ அர்ச்சனைகளும் நடந்தன, அவற்றைப் பார்த்துவிட்டுவந்ததால் தான் தாமதம்" என்றாள்.

பிறகு, லலிதாவும் ராஜேந்திரனும் தினந்தோறும் கோவிலில் சந்திப்பது வழக்கமாகிவிட்டது.

இன்ப நாட்கள்! வெகு சீக்கிரம் ஓடிவிட்டன.

'அப்பா உடனே வரும்படி கடிதம் எழுதியிருக்கிறார். ஆகையால் இன்று ஊருக்குப் போகிறேன். இன்னும் சில தினங்களில் வருகிறேன்" என்று கூறி, லலிதா, பாட்டி, இவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு ஒருநாள் ராஜேந்திரன் போய்விட்டான்.

சில நாட்கள் சில மாதங்களாயின! ராஜேந்திரன் திரும்பவில்லை. லலிதாவின் உடலமைப்பில் மாறுதல்கள் தோன்றின. பாட்டிக்கு விஷயம் தெரிந்துவிட்டது: அவளுக்குத் தலையில் இடிவிழுந்தது போலிருந்தது.

உள்ளூர் பெரிய மிராசுதார் சாம்பசிவ முதலியார் வீட்டிற்குச் சென்று, ராஜேந்திரனைப் பற்றிய தகவல்களைக் கூறி, திருச்சிக்குக் கடிதம் எழுதி அவனை உடனே வரவழைக்கும்படி கேட்டுக்கொண்டாள்.

சாம்பசிவ முதலியார் சிரித்தார். 'ராஜேந்திரன் ஜில்லா கலெக்டர் மகனாவது, மண்ணாங்கட்டியாவது! அந்த ரௌடி குப்புசாமிப் படையாச்சியின் அண்ணன் மகன்! திருச்சியில் ஜவுளிக் கடையில் வேலை பார்க்கிறான். அவன் கொஞ்ச காலமாக இந்த ஊருக்கு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருக்கிறான். உன் வீட்டு விஷயங்களைப்பற்றி உளவு தெரிந்துகொண்டு உன் பேத்தி தலையில் கை வைத்தானாக்கும்! உன் பேத்தியும் சம்மதித்ததனாலே இம்மாதிரி நடந்திருக்க வேண்டும்! இப்பொழுது யார், என்ன செய்ய முடியும்?" என்றார் மிராசுதார்.

"திருச்சி ராமலிங்கம் பிள்ளையிடமிருந்து எனக்குக் கடிதம் வந்ததே, அதுகூடப் பொய்யாகுமா?" என்றாள் பாட்டி.

முதலியார், "பாட்டி, உனக்கு வயதாயிற்றே தவிர, உலக அனுபவம் கிடையாது. ராமலிங்கம் பிள்ளை எழுதியதைப் போல, திருச்சியிலிருந்து யாரையாவது விட்டு கடிதம் எழுதி, போஸ்டு செய்விப்பது என்ன கஷ்டமான வேலையா? போ, போ, எல்லாம் தலையெழுத்துப்படி நடக்கும்" என்றார்.

பாட்டி மனமொடிந்து வீடு திரும்பினாள். ராஜேந்திரனின் வருகை

(5-ம் பக்கம் பார்க்க)

# “அலஹாபாத் சர்ஜன்”

நோயாளிக்கு உபாதை தாங்க முடியவில்லை. ரணத்தின் வேகம் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரிக்கிறது. ஆபரேஷன் செய்தால் உயிருக்கே ஆபத்து வரலாம் என்று உள்ளூர் டாக்டர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். அலஹாபாத்திலுள்ள பெரிய சர்ஜன் வந்து ஆபரேஷன் செய்தால் ஒருக்கால குணமாகலாம் என்று உறவினர் கருதுகின்றனர்.

நோயாளி வலி தாங்க முடியாமல் கதறுகிறான். பணம் செலவானால் ஆகட்டும், அலஹாபாத்திற்குத் தந்தி கொடுத்து, பெரிய சர்ஜனை வரவழையுங்கள் என்று கத்துகிறான்.

அலஹாபாத்திற்குத் தந்தி பறக்கிறது. பெரிய சர்ஜன் ஆகாய விமானத்தில் பறந்து வருகிறார், ஆபரேஷன் செய்வதற்கு.

அலஹாபாத் சர்ஜன் நோயாளியின் அறைக்குள் நுழைகிறார். அவரைக் கண்டதும் நோயாளியின் முகத்தில் மகிழ்ச்சி மலருகிறது—பெரிய டாக்டர், குணப்படுத்தி விடுவார், என்ற நம்பிக்கையால், தாங்க முடியாத உபாதையைக் கூட மறந்து சில நிமிஷங்கள் சாந்தமாயிருக்கிறான்!

அலஹாபாத் சர்ஜனின் அற்புதமான ரணசிகிச்சை முறையை நேரில் பார்த்து, பயிற்சி பெறுவதற்காக, உள்ளூர் டாக்டர்கள் அவரைச் சூழ்ந்து நிற்கின்றனர்.

சர்ஜன் அவர்களைப் பார்த்து, ஒருவா தவிர மற்றவர்களெல்லாம் வெளியில் செல்லுங்கள், என்கிறார். அவ்வாறே அவர்கள் அறையைவிட்டு வெளியே செல்கிறார்கள்.

சர்ஜன் நோயாளியின் முகத்தைப் பார்த்தபடியே சற்று நேரம் அசைவற்று நின்றார். பிறகு பக்கத்திலிருந்த டாக்டரைப் பார்த்து, நோயாளியின் கால் கைகளைக் கட்டச் சொல்லுகிறார். இது ஏதோ புதிய முறையாக்கும் என்று நினைத்து, டாக்டரும் அவ்வாறே செய்கிறார்!

மயக்க மருந்து கொடுப்பதற்குப் பதிலாகக் கைகால்களைக் கட்டச் சொல்லுகிறாரே என்று நோயாளி கொஞ்சம் அஞ்சுகிறான். இருந்தாலும், பெரிய சர்ஜனின் முறைகளைப் பற்றி நமக்கென்ன தெரியும் என்றெண்ணி அவன் பேசாதிருக்கிறான்!

கைகால்கள் கட்டப்பட்டு விட்டன. பிறகு சர்ஜன் தனது சட்டைப் பையிலிருந்து ஒரு துணிப்பந்தை எடுத்து, டாக்டர் கையில் கொடுத்து, அதை நோயாளியின் வாயில் திணித்து வாய் திறக்க முடியாமல் நன்றாகக் கட்டச் சொல்லுகிறார்!

இப்பொழுது உள்ளூர் டாக்டரின் சந்தேகம் கொஞ்சம் அதிகரித்தது, சிறிது தயங்கினார். இருந்தாலும், அலஹாபாத் சர்ஜன் மிகப்பெரிய வைத்தியரென்று உலகப்பிரசித்தி பெற்றவரல்லவா! இங்கிலாந்து, அமெரிக்காவிலெல்லாம் அவரைவிடக் கெட்டிக்காரர் இல்லையென்று கூறுகிறார்களே, சும்மாவா அவ்வாறு சொல்லுவார்கள்? ஆகவே, இதுவும் ஒரு புதிய முறைபோலும், என்று நினைத்து, டாக்டர் நோயாளியின் வாயில் துணிப்பந்தைத் திணித்து இறுகக் கட்டியபின், சர்ஜனுக்குப் பின்னால் சென்று நின்றார்.

நோயாளியின் பயம் இப்பொழுது பன்மடங்கு அதிகரித்து விட்டது. ஆனால், பேச முடியாது, கைகால்களை அசைக்கவும் முடியாது! அவன் என்ன செய்வான்! ரணத்தின் வலியும், நல்ல பாம்பின் விஷம் ஏறுவது போல், கணத்திற்குக் கணம் அதிகரிக்கிறது. அவன் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிகிறது.

சர்ஜன் திரும்பிப்பார்க்கிறார்! பின்னால் நின்ற உள்ளூர் டாக்டரையும் வெளியே போகச் சொல்லுகிறார். அவரும் ஒன்றும் பேசாமல் வெளியே சென்றுவிடுகிறார்!

பிறகு, சர்ஜன் கதவைச் சாத்தி, உள்ளே தாழ்ப்பாள் இடுகிறார். நோயாளியின் அச்சம் இப்பொழுது எல்லை கடந்துவிட்டது! அவனது உடம்பு துடிக்கிறது! என்ன நடக்குமோ என்று எண்ணிப் பார்ப்பதற்குக்கூட அவன் மனம் அஞ்சுகிறது. உடனே சாவு வாராதா, என்று ஏங்குகிறான்.

சர்ஜனது கை மறுபடியும் சட்டைப பைக்குள் நுழைகிறது. அதிலிருந்து வெளியே வந்தது ஒரு துருப்பிடித்த தகரத் தகடு! அதைக் கொண்டு அறுப்பதற்காக சர்ஜன் ரணத்தின் மீது கையை வைத்தார்.

நோயாளி இதைப் பார்த்தான். குபீரென்று அவன் முகம் வியர்த்தது. பயத்தால், விழிகள், துள்ளிக் கீழே விழுந்துவிடுவன போல் தோன்றின. ஆனால், அடுத்த வினாடியில்

அவன் கண்கள் மூடிக் கொண்டன. வியர்வை நின்றது. உடல் அமைதியுற்றது. உயிரும்போய் விட்டது!

சர்ஜன் நோயாளியின் நாடியைப் பார்த்தார். தலையை அசைத்துவிட்டு, கதவைத் திறந்து வெளியே வந்து காரில் ஏறிக்கொண்டு நேரே விமான நிலையத்திற்குச் சென்று விட்டார்! அவருடைய 'பீஸ்'தான் முன்னதாகவே தந்தி மூலம் அவருக்கு அனுப்பியாகி விட்டதே! அவர் ஏன் தாமதிக்க வேண்டும்?

அலறுபாத் சர்ஜனின் இந்த அற்புத வைத்திய முறை, ஒரு தடவையல்ல, ஒரு இடத்திலல்ல, பல தடவைகளில் பல இடங்களில் நடைபெற்று வருகிறது. ஆனால், எங்கும் ஒரே முடிவுதான்—நோயாளி பிழைப்பதில்லை!

முஸ்லிம்கள் காங்கிரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த நேரத்தில், பண்டித நேரு 'முஸ்லிம் பொதுமக்கள் தொடர்பு' என்ற ஒரு இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். அதாவது, 'உங்கள் தலைவர்களின் பேச்சை நம்பினால் தீமை விளையும்; எங்களை நம்புங்கள்; நாங்கள் உங்கள் நன்மைகளைப் பாதுகாக்கிறோம்,'' என்று முஸ்லிம்பொது மக்களிடையே காங்கிரஸ் பிரசாரம் செய்தது. இது அரசியலில் மிகப் பழமையான, வெறுக்கத்தக்க, வைத்திய முறை. பிரிட்டன் கையாண்ட, இப்பொழுதும் உலகின் பல பகுதிகளில கையாளும், பிரித்தாள நினைக்கும் பழைய வைத்திய முறை. புதிய வைத்தியம் என்று கூறி, பண்டித நேரு இந்த முறையைக் கையாண்டார். கண்ட பலன், மிகமிக விபரீதமான விளைவுதான்!

காங்கிரஸ் செய்த முஸ்லிம் பொது மக்கள் தொடர்புப் பிரசாரத்தினால், முஸ்லிம்களின் ஆத்திரம் அதிகமாயிற்று. காங்கிரசில் நம்பிக்கை வைத்து அதில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு சில முஸ்லிம்களும் காங்கிரசை விட்டு விலகினர். அதிக அரசியல் உரிமைகள் மாத்திரம் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் தனி நாடே கேட்கத் தொடங்கினர். தனிநாடும் கிடைத்தது.

பிறகு, சென்ற தேர்தலின் பொழுது, அலறுபாத் சர்ஜன் நேரு; 'அதிர்ச்சி வைத்தியம்' என்ற புதிய முறையைத் தொடங்கினார். பெயர்தான் புதிது. ரம்பத்தினால் நோயாளிகளின் உறுப்புகளை அறுக்கும் பழைய காட்டுமிராண்டித் தனமான வைத்தியந்தான் மறுபடியும் செய்யப்பட்டது! தேர்தலுக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களைப் பொறுக்கி எடுப்பதில் பழைய சூழ்ச்சிகள்தான் மேலோங்கி நின்றன. பழைய பெருச்சாளிகள்தான் முன்னணிக்குக் கொண்டு வரப்பட்டனர். முடிவு திராவிடத்தில் காங்கிரசிற்குப் படுதோல்வி!

அதிர்ச்சி வைத்தியத்தை ஒரு பக்கம் மூட்டை கட்டி வைத்துவிட்டு, பண்டிதர் மறுபடியும் "பொதுமக்கள் தொடர்பு" வைத்தியத்தை ஆரம்பித்திருக்கிறார். கல்கத்தாவில் நடந்த அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், திராவிட நாட்டில் காங்கிரஸ் அடைந்த தோல்வியின் காரணங்களைப் பற்றிப் பலவிதமான ஆராய்ச்சிகள் நடைபெற்றதாம்! கூடியிருந்த காங்கிரஸ்காரர்களுக்கு அலறுபாத் பண்டிதர் தந்த அறிவுரை, திராவிட நாட்டில் "பொது மக்கள் தொடர்பு" வேலையை உடனே ஆரம்பித்து சுறுசுறுப்பாக நடத்துங்கள், என்பதேயாகும்! திராவிடம் என்ற பெயரை அவர் நேரடியாக உச்சரிக்கா விட்டாலும், உறுப்பினர் பலர் அந்தப் பெயரை அடிக்கடி குறிப்பிடவேண்டிய அவசியம் ஏற்பட்டதாம்!

பழைய முஸ்லிம் பொதுமக்கள் தொடர்பு இயக்கத்தைப் போல, இப்பொழுது திராவிட நாட்டில் திராவிடப் பொதுமக்கள் தொடர்பு இயக்கம் விரைவில் ஆரம்பிக்கப் போகிறார்களாம்—காங்கிரசிற்கு நம் பகுதியில் உயிர் கொடுப்பதற்காக!

திராவிட இயக்க எதிர்ப்புப் பிரசாரம் இப்பொழுதும் நம்மிடையே நடத்தப்பட்டுதான் வருகிறது. ஆனால், இனிமேல் அது எதிர்ப்புப் பிரசாரம் என்ற பெயரில் நடக்காமல், பொது மக்கள் தொடர்பு என்ற பெயரில் நடைபெறும்! திராவிடத்தின் தனிப்பெருந் தலைவர்களை நம்பாதீர்கள்; நாங்கள் தான் பொது மக்களின் உண்மையான நண்பர்கள்; உங்கள் குறைகளை நாங்களே தீர்த்து வைக்கிறோம், என்றெல்லாம் இனிமேல் காங்கிரஸ் பிரசாரம்-வெகு தீவிரமாக நடக்கும்! ஆனால், இந்த வைத்தியத்தால் திராவிடத்தில் காங்கிரஸ் பிழைக்குமா? என்பதைப் பற்றி, அலறுபாத் சர்ஜன் மீண்டும் ஒரு முறை சிந்தித்துப் பார்த்தல் அவசியம்.

சேரன் தீட்டியவை

என் மகள்—சிறந்த கற்பனைக் கதை—இன்பத் தமிழ்நடை 1—0—0

கலைக்கோயிலா—விபசார விடுதியா 0—8—0

இன்ப இரவு—கருத்தை அள்ளும் கற்பனை 0—8—0

பகுத்தறிவுப் பாசறை
181, பிராட்வே, சென்னை.

[சிறு கதை]

# கனவு முடிந்தது

("வெள்ளி")

லலிதா, வாத்தியார் சுப்புப் பிள்ளையின் ஒரே மகள். சிறு வயதிலேயே தாயைப் பறிகொடுத்து விட்டாள். வயது முதிர்ந்த பாட்டிதான் வீட்டில் அவளுக்குத் துணை.

சுப்புப் பிள்ளைக்கும் வயது ஐம்பதுக்கு மேலாகி விட்டது. உள்ளூர் ஆரம்பப்பாடசாலையில் ஆசிரியர். சம்பளம் ரூபாய் முப்பது. பிள்ளைகளுக்கு "பிரைவேட்" சொல்லிக் கொடுப்பதில் மாதம் எழெட்டுரூபாய் கிடைக்கும். குடும்பத்தின் ஜீவனச் சக்கரம் நிற்காமல் எப்படியோ சுற்றிக் கொண்டுதான் இருந்தது.

ஆனால் குடும்பத்தின் எளிய நிலைமை குறித்து லலிதா வருந்தியது கிடையாது. எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருப்பாள். சிரிக்கும்பொழுது அவள் கன்னங்களில் குழி விழும். கண்களிலும், அரும்பு போன்ற வெள்ளிப் பற்களிலும் ஒளி வீசும். அவளுக்கு அப்பொழுது வயது பதினாறு.

மழமழவென்று பெருகேற்றிய தங்கத்தைப்போல் மின்னும் அங்கங்கள், கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் மார்பகம்—அவளது வசீகரம் எவர் மனதையும் கலங்கச் செய்யக் கூடியதாயிருந்தது.

ஆனால் லலிதாவிற்கு அவளது அழகின் முழுமையையும் தெரியாது. அதைப் பற்றி அவள் சிந்திப்பதேயில்லை. சதா ஏதாவது பாடிக் கொண்டேயிருப்பாள். துள்ளித் துள்ளிக் குதித்துக் கொண்டே சுறுசுறுப்புடன் வீட்டு வேலைகளைக் கவனிப்பாள். ஓய்வு நேரத்தில் கூடத்திலுள்ள பெஞ்சியில் படுத்தபடியே ஏதாவது கனவுகள் கண்டு கொண்டிருப்பாள்.

சில சமயங்களில் ஓடிப்போய் எதிர் வீட்டுக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து, அதனுடன் கொஞ்சி விளையாடிக் கொண்டிருப்பாள்.

அந்தக் குழந்தை செக்கச்செவேலென்று அழகாயிருக்கும். அது பணக்கார வீட்டுக் குழந்தை. நல்ல சொக்காய் போட்டிருக்கும். நகைகள் தரித்திருக்கும். லலிதா அக் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு அதன் கன்னங்கள் சிவக்கும்படி முத்தமிடுவாள். 'அப்படி முத்தமிட்டால் குழந்தையின் கன்னம் வீங்கி விடாதோ!" என்று அவள் பாட்டி சண்டைக்கு வருவாள். ஆனால் லலிதா பாட்டியை லட்சியம் செய்வதில்லை.

கல்யாணம் செய்துகொண்டால் தனக்கும் அந்த மாதிரி அழகான குழந்தைதான் பிறக்கும் என்று நினைத்துக் கொள்வாள். பிறக்கும் அந்தக் குழந்தைக்கு எந்தவிதமான சொக்காய்கள் போடுவது, அதற்கு என்னென்ன பாட்டுக்கள் சொல்லிக் கொடுப்பது, என்பதைப் பற்றியெல்லாம் மிகத் தீவிரமாகச் சிந்தனை செய்வாள்.

இந்தச் சிந்தனை திடீரென்று ஒரு நாள் வேறொரு சிந்தனையைக் கிளப்பி விட்டது. அதுதான் யாரைக் கல்யாணம் செய்துகொள்வது என்ற பிரச்சினை, யாரைக் கல்யாணம் செய்து கொள்வது?

அது வரை யார் மீதும், அவளது மனது செல்லவில்லை. அவள் தகப்பனார் வாத்தியாரைப் பார்ப்பதற்கெனச் சொல்லிக்கொண்டு ஊரிலுள்ள இளைஞர்களெல்லாம் அவள வீட்டிற்கு அடிக்கடி வருவார்கள். அவர்களுடன் கூச்சமில்லாமல் பேசுவாள், ஆனால் வேறு எந்தவிதமான எண்ணமும் அவள் மனதில் தோன்றியதில்லை.

யாரைக் கல்யாணம் செய்து கொள்வது என்ற யோசனை, முடிவில்லாமல், பல மாதங்கள் வரை அவள் மனதில் நீண்டு கொண்டே சென்றது. குறிப்பாக யார்மீதும் அவள் மனம் நாடவில்லை. ஆனால் அவள், தனக்கு வரும் கணவன் அழகாயிருப்பான், படித்தவனாயிருப்பான், தைரியசாலியாயிருப்பான், நல்ல பணக்காரனாயிருப்பான், என்பதில் மட்டும் சந்தேகப் பட்டதில்லை!

திடீரென்று ஒரு நாள் சுப்புப் பிள்ளை கண்ணை மூடிவிட்டார். வாழ்க்கையின் அல்லல்களிலிருந்து நிரந்தரமான விடுதலை பெற்றுக் கொண்டார்.

தந்தை இறந்த பிறகுதான் லலிதாவிற்கு மனத்தில் அச்சம் தோன்றிற்று. சாப்பாட்டிற்கு என்ன செய்வதென்ற கவலை ஏற்பட்டது. தந்தைக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து வரவேண்டிய "பிராவிடெண்ட் பண்டு" பணம் சுமார் மூந்நூறு ரூபாய் அவளுக்குத் தரப்பட்டது. ஆனால் இந்த மூந்நூறு ரூபாய் எவ்வளவு காலத்திற்கு வரும்! பணமெல்லாம் செலவான பிறகு அவளையும் அவள் பாட்டியையும் யார் காப்பாற்றுவார்கள்?

எங்காவது, வெளியூருக்குச் சென்று வேலை பார்த்துச் சம்பாதிக்க வேண்டுமென்று முடிவு செய்தாள். முடிவு செய்தாளேயொழிய, அந்த முடிவை எப்படி நிறைவேற்றுவது என்பது அவளுக்குத் தெரியவில்லை. என்ன வேலை பார்ப்பது? யார் வேலை கொடுப்பார்கள்?

கதவை யாரோ தட்டிய சத்தம் கேட்டது. சட்டென்று எழுந்து ஓடி வாசற் கதவைத் திறந்தாள். எதிரே ஒரு ஆடவன் நின்றுகொண்டிருந்தான். ஆம் அவன்தான், அவள் கனவு கண்டுகொண்டிருந்த கணவன்! நல்ல அழகு, கம்பீரமான தோற்றம், உயர்ந்த ஆடைகள்—சந்தேகமேயில்லை, அவள் கனவில் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்த அந்தக் கணவன்தான்! அவளது விசாலமான விழிகள் அவனது தோற்றத்தைக் கண்டு பிரமித்து நின்றன. அவன் கண்களும் அவள் எழிலை அள்ளி அள்ளிப் பருகிக் கொண்டிருந்தன.

இரண்டொரு நிமிடங்கள் கழிந்த பின்னரே அவளுக்குச் சுய உணர்வு திரும்பியது. நாணத்தால் தலை குனிந்தாள். கதவைத் திறக்க ஓடிவந்த அவசரத்தில் தன் மார்புச் சேலை கலைந்திருந்ததை அப்பொழுதுதான் கவனித்தாள். வெட்கம் அதிகரித்து நிலை குலைந்தாள். சேலையைச் சட்டென்று சரிப்படுத்திக் கொண்டாள்.

கூச்சமே அறியாத அவளுக்குத் திடீரென அவ்வளவு கூச்சம் எங்கிருந்து வந்தது? மனதை ஒருவிதமாகத் திடப்படுத்திக் கொண்டு, "நீங்கள் யார்? என்ன சமாசாரம்?" என்று கேட்டாள்.

அவன் உடனே பதிலளிக்கவில்லை. அவனது முகத்தில் சிறுநகை தோன்றிற்று. அவள் மனக்கலவரத்தைக் கண்டதும் சிரித்து விட்டான். அவன் சிரிக்கவே, அவளும் சிரித்து விட்டாள். கூச்சம் ஓடிப் போயிற்று, வெட்கம் வெட்கத்துடன் மறைந்து விட்டது.

"நீங்கள் யார்? ஒன்றும் கூறாமல் நிற்கிறீர்களே!" என்றாள், மறுபடியும்.

அவன்: எனக்கு ஊர் திருச்சி, பெயர் ராஜேந்திரன். எனது தந்தையும் சுப்புப் பிள்ளையும் பள்ளிச் சிநேகிதர்களாம். சுப்புப் பிள்ளை காலமாய் விட்டாரென்ற செய்தி என் தந்தைக்குச் சமீபத்தில்தான் தெரியும். நான் கல்லூரிப் படிப்பை முடித்து இரண்டு மாதமாகிறது. இன்னும் வேலைக்குப் போகவில்லை. இந்த ஊரில் என் கல்லூரி நண்பன் ஒருவனிருக்கிறான். அவனுடன் சிறிது காலம் தங்கிப் போகலாமென வந்தேன். திருச்சியை விட்டுப் புறப்படுமுன் என் தந்தை, "வாத்தியார் சுப்புப் பிள்ளை வீட்டிற்குச் சென்று அவர் குடும்பம் எப்படியிருக்கிறதென்று பார்த்துக் கடிதம் எழுது" என்றார். அதனால்தான் பார்த்துவிட்டுப் போகலாம் என வந்தேன்."

லலிதாவின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. "உள்ளே வாருங்கள்" என அவனை அழைத்துச் சென்று பெஞ்சியில் அமரச் செய்தாள். பிறகு பாட்டியைக் கூப்பிட்டு, "பாட்டி, அப்பாவுக்கு வேண்டிய வங்க யாரோ வந்திருக்காங்க' என்றாள்.

அடுப்பங்கரையிலிருந்த பாட்டி மெதுவாக நகர்ந்து வெளியேவந்து "நீ யார், தம்பி! எந்த ஊர்?" என்றாள். ராஜேந்திரன் லலிதாவிடம் கூறியதையே மறுபடியும் கூறினான். அத்துடன் "நான் உங்கள் பிள்ளையுடன் படித்த ராமலிங்கம் பிள்ளையின் மகன்" என்பதையும் தெரிவித்தான்.

"ராமலிங்கத்து மகனப்பா, நீ" என்று பாட்டி ஆவலுடன் அவன் முகத்தைப் பார்த்தாள். பழைய நினைவுகள் மட மட வென்று அவள் மனதில் தோன்ற ஆரம்பித்தன. கண்களிலிருந்து நீர்த் திவலைகள் விழ சிந்தின. தனக்குள்ளே ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டாள். "ராமலிங்கமும் அவனும் சதா ஒன்றாகவே இருப்பான்கள்! செத்த நாழிகூட பிரிஞ்சிருக்க மாட்டானுக" என்று என்னென்னமோ தானாகவே பேசிக் கொண்டாள். பிறகு ராஜேந்திரனைப் பார்த்து, "உங்கப்பா இப்பொழுது என்ன செய்கிறார்? உனக்கு அண்ணன் தங்கச்சிகள் இருக்கிறார்களா?" என்று கேட்டாள்.

ராஜேந்திரன்: "நான் ஒரே பிள்ளைதான். அம்மா இறந்து மூன்று வருஷமாகிறது. அப்பா ஜில்லா கலெக்டர்வேலை பார்த்து இப்பொழுது ரிடயராகி விட்டார்.

பாட்டி இன்னும் ஏதேதோ கேள்விகள் கேட்டாள். ராஜேந்திரனும் அதற்குத் தகுந்த பதில் கூறினான்.

சற்றுநேரத்திற்கெல்லாம் லலிதா காபி போட்டு, ஒரு கிளாஸ் டம்ளரில் ஊற்றி, அவனிடம் கொண்டு வந்து வைத்து, சாப்பிடச் சொன்னாள். அவனும் சாப்பிட்டான்.

பின்னும் சற்று நேரம் உட்கார்ந்திருந்து விட்டு, "நான் இன்னும் ஒரு மாதத்திற்கு இந்த ஊரில் தங்கியிருப்பேன். கூலையதினம் வந்து பார்க்கிறேன்" என்று கூறிச் சென்று விட்டான்.

அவன் சென்றபின், நெடுநேரம் வரையில், பாட்டியும் ஒன்றும் பேசவில்லை, லலிதாவும் மவுனமாயிருந்தாள். இருவரும் ஏதோ ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருப்பவர்போல் காணப்பட்டனர்.

பாட்டி திடீரென எதையோ நினைத்துக் கொண்டவள்போல், "அந்தப் பிள்ளையாண்டானை என்னென்னமோ கேள்விகள் கேட்டேன். கல்யாணமாகி விட்டதா, என்று கேட்கமறந்துவிட்டேனே!" என்றாள்.

"அதற்கென்ன நாளைக்குக் கேளேன் அவரை," என்றாள் லலிதா, சிரித்துக்கொண்டே.

"அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று உனக்கும் ஆசைதானே? தெரிந்துதான் என்ன பிரயோசனம்! அவன் பெரிய இடத்துப் பிள்ளை, எத்தனையோ பணக்கார வீட்டுப் பெண்கள் அவனைக் கட்டிக்கக் காத்துக்கொண்டிருக்க மாட்டார்களா!" என்றாள் பாட்டி.

பாட்டியின் பதிலை லலிதா கவனிக்கவில்லை. அவள் எத்தனையோ தடவைகள் தனது பகற்கனவுகளில் உருவகப் படுத்திப் பார்த்த உருவம் ராஜேந்திரன். அவனே வீடுதேடி வந்திருக்கிறான். என்னை மணம் புரிந்து கொள்ளாமல் போய் விடுவான்! இவ்வாறு எண்ணிற்று அவள் மனம். உடனே புதிய கனவுகள் பழைய கனவுகளுடன் சேர்ந்துபோட்டியிட ஆரம்பித்தன. மணமானபின் இருவரும் சென்னைக்குச் சென்று ஒரு பெரிய பங்களாவில் வசிக்கிறார்கள். ஏராளமான வேலைக்காரர்கள். மோட்டார்காரில்மூன்று. சமையற்காரர்கள் இருவர். விதம் விதமான ஆடைகள். வைரம், பச்சை, நீலம் இவற்றால் இழைக்கப்பட்ட அழகிய ஆபரணங்கள். கணவனுடன் பீச்சுக்குப் புறப்படுகிறாள். அந்தி நேரம். இருவரும் வெண் மணலில் படுத்தபடியே ஒருவரையொருவர் கட்டி முத்தமிட்டுக் கொள்ளுகின்றனர்.

"என்ன லலிதா, சித்தப்பிரமை பிடித்தாற்போல் ஏன் உட்கார்ந்திருக்கே எழுந்திருந்து வேலையைப் பார். அசட்டுத்தனமான எண்ணங்களை மனதில் புகவிடாதே" என்றாள் பாட்டி.

பாட்டியின் குரல் கேட்டதும், கனவு தெளிந்து எழுந்திருந்தாள் லலிதா.

அவன் கூறியபடியே, அடுத்த நாள் வீட்டிற்கு வந்தான் ராஜேந்திரன்.

முதல்நாள் கேட்க மறந்துபோன கேள்வியைக் கேட்டாள் பாட்டி.

ராஜேந்திரன் புன்சிரிப்புடன், "இல்லை பாட்டி, இன்னும் ஆகவில்லை. நீங்கள்தான் எதாவது நல்ல பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வையுங்களேன்."

"பெண்ணுக்கு உனக்கென்னப்பா குறைச்சல்! நான், நீ, என்று எத்தனையோ பேர் முன்வரமாட்டார்களா!" என்றாள் பாட்டி.

ராஜேந்திரன்: "அப்படியானால், உங்கள் பெண்ணைக் கொடுக்க மாட்டீர்களா, பாட்டி? நான் கேட்கிறேன் என்பதனால் நீங்கள் நம்பவில்லை என்று நினைக்கிறேன். அப்படியானால் அப்பாவை விட்டுக் கடிதம் எழுதச் சொல்லுகிறேன்!"

(9-ம் பக்கம் பார்க்க)

# போலீசாரின் புது முறுக்கு!

சமீபத்தில் பம்பாய் போலீசார், இரவில் ஒரு ஆசிரியர் வீட்டிற்குள் புகுந்து, அவரைக் "கைது" செய்ததாகக் கூறி, நேரே விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்று, டில்லிக்குச் செல்வதற்குத் தயாராயிருந்த விமானத்தில் ஏற்றி, தங்களது அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட உத்தரப் பிரதேச அதிகாரிகள் கையில் ஒப்படைத்தனர். உத்தரப் பிரதேச அதிகாரிகள் அவரைத் தங்கள் தலைநகரான லட்சுமண புரியிலுள்ள ஒரு ஹோட்டலில் "சிறை" வைத்தனர்! இதற்கிடையில், அவரைச் சேர்ந்தவர்கள், இந்திய சுப்ரீம் கோர்ட்டிற்கு மனுச் செய்து, போலீசாரின் நடவடிக்கை சட்டப்படி செல்லாதென நீதிபதிகள் தீர்ப்பளித்தபின் ஆசிரியரை விடுவித்தனர்!

இதெல்லாம் கதையல்ல, உண்மையாக நடந்தது. கைது செய்யப்பட்டு அல்லலுக்கானான ஆசிரியரும் சாமானியரல்ல, அவரது பத்திரிகையும் சாதாரணப் பத்திரிகையல்ல. கைது செய்யப்பட்டவர்—உலகப் பிரசித்திபெற்ற "பிளிட்ஸ்" என்னும் ஆங்கில வாரப் பத்திரிகையின் தற்காலிக ஆசிரியர் எச். டி. மிஸ்திரி—பத்திரிகை உலகில் பல ஆண்டுகள் அனுபவம் பெற்றவர், திறமையான எழுத்தாளர்.

மிஸ்திரியைக் கைது செய்யும்படி எந்த நீதிபதியும் உத்திரவு பிறப்பிக்கவில்லை—அவர் பெருந் தவறுகள் எதுவும் செய்யவில்லை. கொலை செய்யவில்லை, கள்ளமார்க்கெட் வியாபாரம் செய்யவில்லை, திருடவில்லை, கலகம் விளைவிக்கவில்லை, அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட வேண்டுமென எழுதவில்லை—எந்த விதமான பயங்கரக் குற்றமும் செய்யவில்லை. உத்தரப் பிரதேச அசெம்பிளியின் தலைவர், அந்த ராஜ்யப் பிரதம மந்திரியான பந்த் என்பவருக்குக் கட்டுப்பட்டவர், என்பதாக 'பிளிட்ஸ்" பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்தது. உத்தரப் பிரதேச அசெம்பிளியின் தலைவர், மேற்படி செய்தி தனது பாரபட்சமற்ற தன்மையைச் சந்தேகித்து தனது ஸ்தானத்தையும் அவமதிக்கும் முறையில் எழுதப்பட்டிருந்ததாகவும், ஆகவே ஆசிரியர் மிஸ்திரியைக் கைது செய்து தனது பிரதேசத்திற்கு அனுப்ப வேண்டுமெனவும், பம்பாய் நகர போலீஸ் கமிஷனருக்கு ஒரு வாரண்டு அனுப்பினாராம்! அந்த வாரண்டை ஆதாரமாக வைத்துக் கொண்டு பம்பாய் போலீசார் ஆசிரியர் மிஸ்திரியைக் கைது செய்தனராம்!

ஒருவரைக் கைது செய்யும்படி உத்திரவிடுவதற்கு, நீதி மன்றத்து நீதிபதியைத் தவிர, மற்றெந்தத் தனிப்பட்ட நபருக்காவது உரிமையுண்டா? என்பதைப் பற்றி, சம்பந்தப்பட்ட இரண்டு பிரதேசங்களின் உயர்தரப் போலீஸ் அதிகாரிகள் லட்சியம் செய்யவில்லையாம்! இதற்குக் காங்கிரஸ் மந்திரிகளும் உடந்தையாயிருந்தனராம்! விந்தையிலும் விந்தை! வெட்கம்! கொடுமை!

ஆசிரியர் மிஸ்திரி கைது செய்யப்பட்டது பற்றிய விபரங்களின் சுருக்கம் வருமாறு:

"பிளிட்ஸ்" பத்திரிகையின் உத்தரப் பிரதேச பிரதம நிருபரான அக்சர் ஹார்வானி என்பவரின் பத்திரிகா உரிமைகளை, உத்தரப் பிரதேச காங்கிரஸ் அரசாங்கம் ரத்து செய்துவிட்டது. ரத்து செய்தது நியாயமல்ல என்பதாக, அசெம்பிளியில் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கண்டனத்தீர்மானம் கொண்டு வந்தார். சபைத் தலைவர் தீர்மானத்தை அனுமதிக்கவில்லை—எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒருமுகமாக அதை வற்புறுத்தியும் கூட!

இச் சம்பவத்தைப் பற்றி நிருபர் ஹார்வானி தனது பத்திரிகைக்கு அனுப்பிய செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "சபைத் தலைவர் ஹாசன் செய்த முடிவு இங்கு யாருக்கும் ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை. ஏனென்றால், சகல ஜனநாயகக் கோட்பாடுகளை நிலைநிறுத்துவதில் அவர் தனது கவனத்தைச் செலுத்தாமல், பிரதம மந்திரி பந்த் என்ன அபிப்பிராயப் படுகிறாரோ அதையேதான் பின்பற்ற ஆசைப்படுகிறாரென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும்."

மேற்படி செய்தி அசெம்பிளித் தலைவரின் ஸ்தானத்திற்குப் பங்கம் விளைவிக்கக் கூடியதெனவும், ஆகவே அதைப் பிரசுரித்ததற்காக டிசம்பர் 21, 1951-க்குள் தகுந்த சமாதானம் கூறவேண்டுமெனவும் உத்தரப் பிரதேச அசெம்பிளியின் 'உரிமைக் கமிட்டி', ஆசிரியர் மிஸ்திரிக்குக் கடிதம் எழுதிற்று.

"பிளிட்ஸ்" பத்திரிகை பம்பாய் ராஜ்யத்திலிருந்து வெளிவருகிறது. பம்பாயிலிருந்த ஆசிரியர் மிஸ்திரி, கமிட்டியின் கடிதத்தைப் பார்த்த உடனே, லட்சுமணபுரியிலிருந்த தனது நிருபர் ஹார்வானிக்கு ஒரு கடிதம் எழுதி, அதில் ஹார்வானி அசெம்பிளி உரிமைக் கமிட்டியின் முன் நேரில் ஆஜராகி, சபைத் தலைவரின் ஸ்தானத்திற்குப் பங்கம் விளைவிக்க வேண்டுமென்ற எண்ணம் "பிளிட்ஸ்" பத்திரிகைக்கு இல்லையாதெனக் கூறி, விஷயத்தைச் சுமுகமான முறையில் முடித்துவிடவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

மிஸ்திரியின் கடிதத்தை ஹார்வானி உரிய காலத்தில் பார்க்க முடியவில்லை. ஏனெனில், அச்சமயம் நிருபர் ஹார்வானி, சட்டசபையின் அபேட்சகராகத் தேர்தல் வேலையில் ஈடுபட்டிருந்ததால், டில்லிக்கும் லட்சுமணபுரிக்குமாக அடிக்கடி அலைந்து கொண்டிருந்தார். ஆசிரியரின் கடிதம் அவர் கைக்குக் கிடைக்கவில்லை. ஆகையால் ஆசிரியர் எழுதியிருந்தபடி அவர் செய்யவில்லை. அவ்வாறு செய்யவில்லை என்பதும் ஆசிரியருக்குத் தெரியாது.

இந் நிலையில், ஆசிரியர் மிஸ்திரியிடமிருந்து குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் கிடைக்கவில்லை என்ற காரணத்தை வைத்துக் கொண்டு, உரிமைக் கமிட்டி விஷயத்தை மறுபடியும் பரிசீலனை செய்தது. பரிசீலனையின் முடிவு, "பிளிட்ஸ் பத்திரிகையில் பிரசுரமான செய்தி சட்ட சபையை அவதூறுக்குள்ளாக்குகிறது"! என்பதாகும். இந்

தக் குற்றத்தைச் செய்தாரென்பதற்காக ஆசிரியருக்கு "மிகக் கடுமை"யான தண்டனை விதிக்க வேண்டுமெனக் கமிட்டி முடிவு செய்தது.

இந்தக் கடுமையான தண்டனையை விதிப்பதற்குக் கைதி வந்தாகவேண்டுமல்லவா! கைதியோ (ஆசிரியர் மித்திரி) பம்பாய்வாசி. ஆகவே, உத்தரப் பிரதேச அசெம்பிளித் தலைவர், மிஸ்திரியைக் கைது செய்து தனது சட்ட சபை முன் ஆஜர் செய்ய வேண்டுமென பம்பாய் போலீஸ் கமிஷனருக்கு ஒரு வாரண்டு அனுப்பினார்!

அவர் சட்டசபைத் தலைவர் என்ற போதிலுங்கூட, நீதிபதியல்லவே! இன்னொரு ராஜ்யத்திலுள்ள ஒருவரைக் கைது செய்யும்படி உத்திரவிடுவதற்கு அவருக்கு ஏது அதிகாரம்? அப்படி அவர் அதிகாரம் செய்தாலுங்கூட, பம்பாய் போலீஸ் கமிஷனர் அதற்குக் கட்டுப்படலாமா? இவையெல்லாம், சட்ட சம்பந்தமான, இன்னும் தீர்க்கப்படாத, பிரச்சினைகள்.

சட்ட சபைத் தலைவருக்கு பிற ராஜ்யத்தைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்யும்படி உத்திரவிட அதிகாரம் இருக்கிறதென்று வைத்துக் கொண்டாலும், பம்பாய் போலீஸ் கமிஷனர் என்ன செய்திருக்க வேண்டும்? கைது செய்த 24-மணி நேரத்திற்குள் கைதியை மாஜிஸ்டிரேட் ஒருவர் முன் ஆஜர் செய்திருக்க வேண்டும். அதுதான் சட்டம். அப்படிச் செய்திருந்தால் கைது செய்யப்பட்ட ஆசிரியர் மித்திரி தன்னை ஜாமீனில் விடுதலை செய்யவேண்டுமென மாஜிஸ்டிரேட்டிடம் விண்ணப்பித்துக் கொண்டிருப்பார். மாஜிஸ்டிரேட்டும் அவரை ஜாமீனில் விட்டிருப்பார்!

ஆனால் அப்படியெல்லாம் ஒன்றும் செய்யவில்லை. ஏனென்றால், ஆசிரியர் மித்திரியை அவமானப்படுத்தி, துன்பப்படுத்த வேண்டும், அவரை "அபகரித்து" உத்தரப் பிரதேசத்திற்குக் கொண்டுபோய் அங்கு சிறையில் வைக்கவேண்டும் என்றெல்லாம் சில பிரபல காங்கிரஸ் தலைவர்கள், மந்திரிகள், ஒரு சதித்திட்டம் ஏற்பாடு செய்திருந்தனர்! மந்திரிகளுக்குப் பயந்து, இச் சதிக்கு உயர்தர போலீஸ் அதிகாரிகளும் உடந்தையாயிருந்தனர்.

இனி; மேற்கொண்டு நடந்ததைக் கவனிக்கலாம், உத்தரப் பிரதேச அசெம்பிளித் தலைவர் பிறப்பித்த வாரண்டு, அவர் பம்பாய் அரசாங்கப் பிரதம காரியதரிசி, பம்பாய் போலீஸ் கமிஷனர் ஆகியோருக்கு இது சம்பந்தமாக எழுதிய கடிதங்கள், எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, உத்தரப் பிரதேச சி. ஐ. டி. அதிகாரி ஒருவர் லட்சுமணபுரியிலிருந்து புறப்பட்டு, பம்பாய் வந்து சேர்ந்தார்.

அவர் பம்பாய் வந்து சேர்ந்த விஷயம் எப்படியோ "பிளிட்ஸ்" பத்திரிகைக்குத் தெரிந்து விட்டது. உடனே "பிளிட்ஸ்" சார்பில், அதன் வக்கீல்கள் பம்பாய் அரசாங்கப் பிரதம காரியதரிசிக்கும் போலீஸ் கமிஷனருக்கும் கடிதங்கள் எழுதி, அவற்றில், உத்தரப் பிரதேச வாரண்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஆசிரியர் மித்திரி மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக் கூடாதென்றும், அப்படி எடுப்பதாயிருந்தால் நீதிமன்றத்தின் மூலம் ஒழுங்கான நடவடிக்கை முறைகளை அனுசரித்துத்தான் செய்யவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர்.

இக் கடிதங்களைக் கண்ட அதிகாரிகள் ஆசிரியர் மித்திரியைக் கைது செய்வதற்குத் தயங்கினார்களாம்! ஆனால், பம்பாய் உள்நாட்டு மந்திரி மொரார்ஜி தேசாய் (சமீபத்தில் சட்டசபைத் தேர்தலில் தோற்றவர்) "பரவாயில்லை, மித்திரியைக் கைது செய்யுங்கள்! சட்டம் குறுக்கிட்டால், பின்னால் பார்த்துக்கொள்ளலாம்!" என்றாராம். "பிளிட்ஸ்" என்ற பெயரைக் கேட்டாலே மொரார்ஜிக்கு ஆகாது! ஏனென்றால், மொரார்ஜியின் அட்டூழியங்களைக் கண்டித்து "பிளிட்ஸ்" அடிக்கடி எழுதுவது வழக்கம்! "மித்திரியை உடனே கைது செய்து பம்பாய் ராஜ்யத்திற்கு வெளியே அனுப்புங்கள்!" என்று கர்ஜித்தாராம்!

அன்று இரவே, சுமார் 8.மணிக்கு, "கிளம்புங்கள், உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள்" என்ற அனுமதி (உத்திரவு) போலீசாருக்குத் தரப்பட்டது. போலீசாரும் சுறுசுறுப்புடன் தங்கள் வேலையைச் செய்யத் தொடங்கினர்; பொழுது விடிவதற்குள் மித்திரியின் வீட்டிற்குச் சென்று, படுக்கையில் தூங்கிக் கொண்டிருந்த அவரை எழுப்பிக் கைது செய்தனர்.

கைது செய்தது மாத்திரமல்ல, மிகமிகக் கேவலமான, அருவருக்கத் தக்க முறையில் அவரை நடத்தினர். ஒரு திருடனைக் கைது செய்தால் அவனுக்குத் தரப்படும் வசதிகளைக்கூட ஆசிரியர் மித்திரிக்குப் போலீசார் தரவில்லை. அவர் லட்சுமணபுரிக்கு விமானமூலம் தூக்கிச் செல்லப்படுவார் என்பது போலீசாருக்குத் தெரிந்திருக்கும், தேவையான துணிமணிகளை எடுத்து வருவதற்குக்கூட அவருக்கு அவகாசம் தரவில்லை.

"உடனே கிளம்பி வா! இல்லாவிடின் பலாத்காரத்தைக் கையாளுவோம்" என்று அவரைப் பயமுறுத்தினர். இடையில், மித்திரி கைதியான செய்தியைக் கேள்விப்பட்ட "பிளிட்ஸ்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் காரஞ்சியா அவர் வீட்டிற்கு ஓடோடியும் வந்து, "எங்கள் வக்கீல்கள் வரும் வரையில் பொறுங்கள்" என்று போலீசாரை வேண்டிக்கொண்டார். அதற்கு, "மித்திரி உடனே வராவிடில் அவரைத் தூக்கிக் கொண்டு போவோம்" என்ற இறுமாப்பான பதில்தான் கிடைத்தது. மறுபடியும், "அவரை எங்கே இப்பொழுது அழைத்துச் செல்கிறீர்கள்?" என்று காரஞ்சியா அவருடன் கேட்டார். "சி. ஐ. டி. காரியாலயத்திற்கு அழைத்துச் செல்லுகிறோம்" என்று போலீசார் பதிலளித்தனர். ஆனால் அது பொய். காரஞ்சியாவை ஏமாற்றுவதற்காக, வேண்டுமென்றே போலீசார் பொய் சொன்னார்கள்.

உண்மையில் அவர்கள் மித்திரியை சி. ஐ. டி. காரியாலயத்திற்கு அழைத்துச் செல்லவில்லை. அவரைக்கொண்டு சென்ற இடம் வேறு — அதுதான் பம்பாய் விமான நிலையம்! இது தெரியாத காரஞ்சியாவும் மற்ற நண்பர்களும், சி. ஐ. டி. காரியாலயத்திற்குச் சென்று பார்த்தனர். மித்திரி அங்கில்லை. அவரைப் பற்றித் தங்களுக்கு ஒன்றும் தெரியாதென அங்கிருந்தவர்கள் கூறிவிட்டனர்! போலீஸ் கமிஷனருக்கு பலமுறை டெலிபோன் செய்து பார்த்தார்கள்—ஒன்றும் பதிலில்லை. கண்களைக் கட்டிக் காட்டில் விடப்பட்டவர்கள்போல் திண்டாடினர்.

(7-ம் பக்கம் பார்க்க)

# புத்தம் புதிய நூல்கள்

**கழல் விளக்கு**—மு. கருணாநிதியின் கருத்துக்கோவை-பல்சுவைத் தொகுப்பு—இன்பத்தின் ஊற்று—படிக்கப் படிக்க சுவை தரும் எழுத்தோவியங்கள். அழகிய மூவர்ண அட்டை.
விலை ரூ. 1—6—0

**வானம்பாடி**—தணலன் தீட்டியது. கருத்தை அள்ளும் கற்பனை—ஏழைகளின் வாழ்வில் ஏற்படும் கொந்தளிப்புகளைக் கொண்டு சித்தரிக்கப்பட்ட சிறந்த கருத்தோவியம். அழகான மூன்றுநிற முகப்புடன் 186 பக்கம் விலை ரூ. 1—8—0

**தூர்ச்சி**—மு. அருணாசலம் எழுதிய அரிய நாடகம். அழகான மூவர்ண அட்டை—நல்ல சரளமான நடை—அரசகுரு மயானந்தரின் வஞ்சகம் அழிந்த வரலாற்றை விளக்குவது. 92 பக்கங்கள்
விலை ரூ. 1—0—0

**செங்கிஸ்கான்**—கா. தங்கவேலர் தந்த பல கருத்துக் குவியல்கள் செங்கிஸ்கான், எகிப்து, பாரதவிக்கும் பாரசீகம், தாய்லந்து திபேத், பேரு வீரர் ஆகிய ஆறு பகுதிகளில் அறுசுவை உணவை அளிக்கிறார் தங்கவேலர். கண் கவரும் பல நிற அட்டை
விலை 1—0—0

**உலகைத் திருத்திய உத்தமர்கள்**—சாக்ரடீஸ், அபிரகாம் லிங்கன், மார்ட்டின் லூதர், ரூஸோ, லெனின் ஆக ஆறு பகுத்தறிவுப் பேரறிஞர்களின் படப்பிடிப்பு. அரிய கருத்துக்கள் அழகான நடை.
விலை ரூ. 1—0—0

**செவ்வானம்**—கோரநாதன் உதவிய செந்தேன். துவளும் பூங்கொடியாக—தீய்ந்து கருகும் மொட்டாக துள்ள மனத்தினரால் மாற இருந்த புனிதை குமுதத்தைக் காத்து, அவள் வாழ்விலே செவ்வானச் சிரிப்பு தோன்றுமாறு செய்தான் தாமோதரன். இதனைச் சுவைபட விளக்கும் அரிய நூல் இது. அழகான முகப்பு. 148 பக்கம் விலை ரூ. 1—8—0

**விதவையின் காதல்**—சுப. நாராயணன் தந்த நவீனம். செந்தமிழ் நடை—படிக்கப் படிக்க சுவைப்பது—கருத்துச் செறிவு நிறைந்தது—அழகான மூவர்ண அட்டை விலை ரூ. 1—0—0

**இதயக் குமுறல்**—கோவை. எஸ். சதாசிவம் அளித்த காத்தோவியம். உலக வாழ்வில் அலைமோதி, அலையாக வந்துமோதும் கொடுமைகளை எதிர்த்துப் போராடி தன் லட்சிய வாழ்க்கையை நடத்திய காதலர்களைப் பற்றிய அரிய நவீனம். தெவிட்டாத தேன்சுவை—ஒப்பற்ற உயர் கருத்துக் குவியல்—செந்தமிழ் ஊற்று இந்நூல். அழகான மூவர்ண அட்டை
விலை ரூ. 1—8—0

## பகுத்தறிவுப் பாசறை

131, பிராட்வே, சென்னை.


(8-ம் பக்கத் தொடர்ச்சி)

—மறுபடியும் மக்கள் காங்கிரஸ் ஆட்சியை விரும்பவில்லை. ஆகவே, காங்கிரஸைத் தவிர மற்றெந்தக் கட்சியினராவது மந்திரிசபை அமைக்க வேண்டுமென ராஜப்பிரமுகர் அழைத்திருக்கவேண்டும். அப்படிச் செய்வதுதான் ஜனநாயக முறை—மக்கள் மனதிற்கு மாறாக நடக்காமல் மந்திரிசபை அமைக்கும் வழி.

சென்னை ராஜ்யத்திற்கும் இதே நிலைதான் காத்திருக்கிறது. பெரும்பான்மை எண்ணிக்கை பெறாத காங்கிரஸ்தான் மந்திரிசபை அமைக்கப் போகிறதாம்! இது தவறென்று மறுபடியும் வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்

திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத்தில் மந்திரிசபை அமைத்ததே குற்றம். அதைவிடப் பெருங்குற்றம்—நிதி சம்பந்தமான அதன் தீர்மானம் சட்டசபையில் தோற்றுப்போன பின்னரும் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதாகும்.

இரிஞ்சலக்குடா ராஜாவிற்கு ராஜ்ய அரசாங்கம் இதுவரை ஆண்டொன்றுக்கு 50,000 ரூபாய் மான்யம் கொடுத்து வருகிறது. இதை 60,000 ரூபாயாக உயர்த்தவேண்டுமென காங்கிரஸ் மந்திரிசபையினர் சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தனர். தீர்மானத்திற்குச் சாதகமாக 43 பேரும், பாதகமாக 51 பேரும் ஓட்டளித்தனர். தீர்மானம் தோற்றது. ஆனால், இன்னும் அவர்கள் ராஜினாமா செய்யவில்லை! அவர்கள் வாழ்க !!

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons.)